# தமிழன்
THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 167 சுபகிருது வருடம், தை மாதம் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை (10.02.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ரஜப் - 18, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


**கமெண்ட் கந்தர்...**

தேர்தல் முடிவுகள கேட்கிற காத்திருப்பை விட பெரிய எதிர்பார்ப்பா கிடக்குது தேர்தல் தொடர்பா நீதிமன்றம் சொல்லப்போகும் தீர்ப்பு...





**உஷ்**

தற்போதைய அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களின் செயற்பாடுகளை ஆராய்ந்து விசேட அறிக்கையொன்றை தருமாறு ஜனாதிபதி ரணில் தனக்கு நெருக்கமான அரச அதிகாரி ஒருவரை கேட்டுள்ளாராம்.

அடுத்த அமைச்சரவை மறுசீரமைப்பின்போது, இந்த அறிக்கையின் பிரகாரம் சில அமைச்சர்களை தொடர்ந்தும் அமைச்சரவைக்குள் வைத்திருப்பதா இல்லையா என்றும் தீர்மானிக்கவுள்ளாராம் ஜனாதிபதி.

# வடிவேல் சுரேஷ் பதவி இராஜினாமா!

## கட்சியின் அனைத்துப் பொறுப்புகளையும் நேற்றுமாலை அதிரடியாக துறந்தார்





(நிர்ஷன் இராமானுஜம்)

பதுளை தேர்தல் தொகுதிக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச மேற்கொண்ட தேர்தல் பிரசார சுற்றுப் பயணம் தொடர்பில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டால் ஐக்கிய மக்கள் சக்தியில் இதுவரை காலமும் வகித்துவந்த அனைத்துப் பதவிகளிலிருந்தும் இராஜினாமா செய்வதாக பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் 'தமிழன்' நாளிதழுக்கு தெரிவித்தார்.

மடுல்சீமையில் நேற்று ஏற்பாடாகியிருந்த தேர்தல் கூட்டத்துக்கு சஜித் பிரேமதாச வருகை தருவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. பெருந்தோட்டத் தொழிலாளர்கள் உள்ளிட்ட பலர் சஜித்தின் வருகைக்காக காத்திருந்தனர். எனினும் அந்தக் கூட்டம் பாராளுமன்ற உறுப்பினர்...

02 பக்கம்



# துருக்கி, சிரியாவில் மீட்புப் பணிகளுக்கு துரிதமாக உதவுங்கள்

## சர்வதேச நாடுகளிடம் உலக சுகாதார ஸ்தாபனம் கோரிக்கை

10 பக்கம்





இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய மத்திய இணை அமைச்சர் எல். முருகன் மற்றும் தமிழக பா.ஜ.க. தலைவர் கு.அண்ணாமலை ஆகியோரை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் ஆகியோர் பலாலி சர்வதேச விமான நிலையத்தில் நேற்று (09) வரவேற்று கலந்துரையாடல் நடத்தினர்.

# ஷாப்டர் கொலையில் திடுக்கிடும் திருப்பம்

**வெளியான புதிய தகவல்**

வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் மரணம் சயனைட் உட்கொண்டதன் விளைவாகும் என புதுக்கடை நீதவான் நீதிமன்றத்திற்கு நேற்று முன்தினம் (08) அறிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனை அறிக்கையின்படி, கழுத்தை நெரித்ததில் ஷாப்டருக்கு ஏற்பட்ட காயங்கள் ஆபத்தானவை அல்ல என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று மேலதிக நீதவான் ராஜீந்திர ஜயசூரிய...

02 பக்கம்

# மகா சங்கத்தினரின் எதிர்ப்பை மீறி எதுவும் செய்ய முடியாது

## வடக்கு, கிழக்கு பிரச்சினையைத் தீர்க்க சர்வகட்சி அரசாங்கமே அவசியமென்கிறார் மைத்ரி

(நா. தினுஷா)

மகா சங்கத்தினரின் எதிர்ப்பை மீறி, 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது பிரச்சினைக்குரிய விடயமாகும். அதனையும் மீறிச் செய்தால் பெரும் நெருக்கடிகளை சந்திக்க வேண்டும். வடக்கு, கிழக்கு பிரச்சினைகளுக்கு தீர்வு வேண்டுமெனில் சர்வகட்சி அரசாங்கமொன்றே உருவாக்கப்படவேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதியும் சுதந்திரக் கட்சியின் தலைவருமான...

02 பக்கம்

# சஜித் வருகை தராததால் மடுல்சீமையில் பதற்றம்

**ஐவர் கைது**

(என். மலர்வேந்தன்)

ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் கூட்டம் பதுளை, மடுல்சீமையில் நேற்று (09) ஏற்பாடுசெய்யப்பட்டு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வருகைதருவதாக கூறப்பட்டபோதிலும் அவர் சமுகமளிக்காததால் ஆதரவாளர்களிடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச 09ஆம் திகதி மடுல்சீமை நகருக்கு வருகை தருவதாக கடந்த சில நாட்களாக மடுல்சீமை பகுதியில் மக்கள் பரபரப்பாக பேசிக்கொண்டனர். இந்நிலையில், நூற்றுக்கணக்கான கட்சி ஆதரவாளர்கள் நேற்றைய தினம் மடுல்சீமையில் கூடியிருந்த நிலையில் பதுளை...

02 பக்கம்

# சரத் வீரசேகர ஒரு முட்டாள்: கஜேந்திரன் எம்.பி. ஆவேசம்!

## இனவாதிகளாலேயே நாட்டுக்கு ஆபத்தெனவும் தெரிவிப்பு



சரத் வீரசேகர ஓர் இன வெறியர். இவரைப் போன்றோராலேயே இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடியது. இப்படியான இனவாதிகளை வைத்துக்கொண்டு நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லக் கூடாது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் சபையில் நேற்று (09) ஆவேசத்துடன் உரையாற்றினார்.

02 பக்கம்

# பௌசி எம்.பியாக சத்தியப்பிரமாணம்



ஒன்பதாவது பாராளுமன்றத்தின் பாராளுமன்ற உறுப்பினராக ஏ.எச். எம்.பௌசி, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் நேற்று பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

சபாநாயகர் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்ட பின்னர் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க முன்னிலையில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும்...

02 பக்கம்

# எம்.பிக்களின் சிறப்புரிமை மீறப்படுவதை கண்டறிய தெரிவுக்குழுவை நியமிக்கவும்

## சபாநாயகரிடம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை

பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் மீறப்படுவது தொடர்பில் விசாரிப்பதற்கு பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமிக்குமாறு எம்.பிக்கள் குழுவொன்று சபாநாயகரிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

2020 டிசம்பர் 03ஆம் திகதி ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட தேர்தல் ஆணைக்குழுவை நியமித்தல் மற்றும் அரசியலமைப்பின் 1048(3) ஆவது பிரிவின் கீழ் பாராளுமன்றத்திற்கு அவர்களின் பொறுப்பு தொடர்பிலும் சுட்டிக்காட்டி இக்கடிதம்...

02 பக்கம்

# தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளி விடுகிறார் ஜனாதிபதி ரணில்

## பிக்குகளையும் இனவாதிகளையும் தூண்டிவிடுவதாக சிறீதரன் எம்.பி. குற்றச்சாட்டு

(நா. தினுஷா)

அரசாங்கத் தரப்பு தொடர்ந்தும் ஒற்றையாட்சிக்குள்ளேயே தீர்வு என்ற நிலைப்பாட்டில் இருந்தால், இலங்கை உருப்படுவதற்கான வாய்ப்பு இல்லை. அரசியல் தீர்வுவேண்டுமென்றால், இங்கு வாழ்கின்ற இந்த நாட்டுக்கே உரித்தான சகோதர தமிழ்த் தேசிய இனம் தங்களுடைய உரிமைகளோடும் உரித்துகளோடும் வாழ வேண்டுமென்றால், இந்த நாடு பிளவுபடாமல் இருக்க வேண்டுமென்றால் சமஷ்டி முறையே ஏற்புடையதாக இருக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சபையில் நேற்று (09) தெரிவித்தார்.

மேலும், 13ஆவது அரசியலமைப்பு விவகாரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க...

02 பக்கம்

# டயனாவை கைதுசெய்ய பிடியாணை தேவையில்லை

**நீதிமன்றம் அறிவிப்பு**

இலங்கையின் குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டங்களை மீறியமை கண்டறியப்பட்டால், சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவை கைது செய்வதற்கு பிடியாணை தேவையில்லை என கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்...

02 பக்கம்

# உயிரிழந்த பின்னரே கௌரவம் கிடைக்கிறது

## இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார கவலை

(நா. தினுஷா)

எமது வரலாற்றில், நாட்டுக்கான சிறந்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்தவர்கள் அனைவருக்கும் உயிரிழந்ததன் பின்னரே அவர்களுக்கான கௌரவம் வழங்கப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இன்று திருடர் என்று வஞ்சிக்கிறார்கள். என்றாவதொருநாள் மஹிந்தவை...

02 பக்கம்

# தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள அதிகரிப்பு அவசியம்

## சம்பள நிர்ணய சபைக்கு பரிந்துரைக்குமாறு அமைச்சர் ஜீவன் தொழில் அமைச்சரிடம் கோரிக்கை

தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களில் தொழில்புரியும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கான பரிந்துரையை முன்வைக்கும்படி, சம்பள நிர்ணய சபைக்கு பணிப்புரை விடுக்குமாறு தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவிடம், கோரிக்கை விடுப்பதற்கு...

02 பக்கம்

## உயிரிழந்த பின்னரே...

கொண்டாடுவார்கள். அன்று எனது நிலைப்பாட்டின் அர்த்தம் புரியும் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் சபையில் நேற்று (09) தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அக்கிராசன உரை தொடர்பான விவாதத்தின் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன கூறுகிறார். ஆனால், உங்களின் கட்சி செயலாளரின் நிலைப்பாடு வேறுபட்டதாகும். நாம் எமது தவறுகள் குறித்து சிந்திக்க வேண்டும். எமது பண்புகளை மாற்றிக்கொள்ளும் வரை எம்மால் முன்னேற முடியாது.

எமது வரலாற்றில், மக்களுக்காக சேவையாற்றிவிட்டு நற்பெயரை பெற்றுக்கொண்டவர்கள் யாரும் இல்லை. எமது நாட்டை பொறுத்தவரையில், நற்பெயரை பெற்றுக்கொள்ள வேண்டும், கௌரவத்தை பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் உயிரிழக்க வேண்டும். உயிரிழந்தால் மாத்திரமே நமக்கான நற்பெயரும் கௌரவமும் கிடைக்கும்.

இதற்கு தேவையானளவு சிறந்த உதாரணங்கள் இருக்கின்றன. அநாகரிக்க தர்மபால நாட்டிலிருந்து தப்பிச் சென்றார். ஆனால், இன்று நாட்டின் ஒவ்வொரு பாகங்களிலும் அவருக்கு உருவச் சிலை அமைத்து நினைவஞ்சலி செலுத்துகிறார்கள். சுதந்திரக் கல்வியின் தந்தை கண்ணங்கர, கல்வி முறையை மறுசீரமைத்து அனைவருக்கும் கல்வி உரிமையை பெற்றுக்கொடுத்தார். ஆனால், அடுத்த தேர்தலிலேயே அவரை தோற்கடித்து வீட்டுக்கு அனுப்பினார்கள். அவர் இறந்ததன் பின்னர் இன்று பூ வைத்து வணங்குகிறார்கள்.

காமினி திசாநாயக்க மகாவலி நீர்ப்பாசனத் திட்டத்தை அமைத்தபோது, காமினி திருடர் என்ற நிலைப்பாட்டை நாட்டில் உருவாக்கினார்கள். அவர் உயிருடன் இல்லாதபோது காமினி போன்ற ஒருவர் நாட்டில் இருக்க வேண்டும் என்கிறார்கள். உலகின் முதலாவது பெண் பிரதமரான சிறிமாவோ பண்டாரநாயக்கவை பூச்சியமாக்கி அவரின் குடியுரிமையை இரத்துச் செய்தார்கள். இன்று அவரை மலர் வைத்து அஞ்சலி செய்கிறார்கள்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இன்று அதுவே இடம்பெறுகிறது. மஹிந்த திருடர் என்று கூறுகிறார்கள். என்றாவதொரு நாள் அவருக்கு கௌரவமளிக்கும்போது எனது இந்த உரையின் அர்த்தம் புரியும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்றார்.

## வடிவேல் சுரேஷ்...

வடிவேல் சுரேஷ் தலைமையில் ஆரம்பமானது.

சுகயீனம் காரணமாக வருகைதர முடியாமல் உள்ளதாக சஜித் தரப்பில் கூறப்பட்டதாக வடிவேல் சுரேஷ் கூட்டத்தில் அறிவித்தார். எனினும், அதே நேரத்தில் வெலிமடையில் ஒரு கூட்டத்தில் சஜித் பிரேமதாச கலந்துகொண்டதாக அறியக் கிடைத்தது.

இதனால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷுக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் விலகுவதாக வடிவேல் சுரேஷ் அறிவித்துள்ளார். அதன் பிரகாரம் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிப் பொதுச் செயலாளர் மற்றும் பசறை தொகுதி அமைப்பாளர் ஆகிய பதவிகளிலிருந்து இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் வடிவேல் சுரேஷ் 'தமிழன்' நாளிதழுக்கு மேலும் தெரிவித்ததாவது,

மடுல்சீமை கூட்டத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வருகை தருவதாக உறுதியளித்திருந்தார். அதற்காக 18 தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் தங்களது தொழிலை விட்டுவிட்டு வருகை தந்திருந்தனர். எனினும், அவருக்கு சுகயீனம் காரணமாக வருகைதர முடியவில்லையெனவும் பதுளை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதாகவும் அவர் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

உடனடியாக, கூட்டத்தில் மன்னிப்புக் கேட்டுவிட்டு வைத்தியசாலைக்குச் சென்றேன். சஜித் பிரேமதாச அந்நேரத்தில் வெலிமடையில் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் நேரடி காணொளியை வைத்தியர் என்னிடம் காட்டினார். என்னையும் மக்களையும் ஏமாற்றியமை மனவருத்தத்தை தந்துள்ளது. அதனால் ஐக்கிய மக்கள் சக்தியில் வகித்த சகல பதவிகளையும் இராஜினாமா செய்வதாக அறிவித்தேன் என்றார்.

## சஜித் வருகை...

மாவட்ட அமைப்பாளர் வடிவேல் சுரேஷ் எம்.பி. தலைமையில் கூட்டம் ஆரம்பமாகியது.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச கூட்டத்திற்கு சமுகமளிக்காமையால் கட்சி ஆதரவாளர்கள் கூச்சலிட்டனர். இதன்போது ஆதரவாளர்களுக்கிடையே ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறத்தொடங்கியது.

நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக கைகலப்பில் ஈடுபட்ட ஐந்து பேரை மடுல்சீமை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

## ஷாப்டர் கொலையில்...

முன்னிலையில் ஷாப்டரின் மரணம் தொடர்பான உண்மைகளை முன்வைத்த போது இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஷாப்டரின் கைத்தொலைபேசி மற்றும் ஐபாட் ஆகியவற்றை ஆய்வு செய்த பின்னர் வெளிப்பட்ட மற்ற தகவல்களையும் விசாரணைக்குழு நீதிமன்றத்தில் வெளிப்படுத்தியது. அதிகாரிகளின் கூற்றுப்படி, ஷாப்டர் தனது மனைவி மற்றும் அவரது மனைவியின் பெற்றோருக்காக தயாரித்த பல ஆவணங்கள் மொபைல் போன் மற்றும் ஐபாடில் சேமிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அவரது ஐபாடில் 'Apple Note' இல் சேமிக்கப்பட்ட தரவுகளில் 'லிஸ்ட்' எனப்படும் ஒரு ஆவணம் இருந்தது. மேலும் பல பொருட்களின் பட்டியலில் 'KCM' மற்றும் 'ZIP TIE' போன்ற சொற்கள் அந்த ஆவணத்தில் இருந்தன. 'KCM' என்பது சயனைட்டைக் குறிக்கும் சுருக்கமான பெயர் என்றும், 'ZIP TIE' என்பது எதையாவது அல்லது யாரையாவது கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருள் என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

அவரது ஐபாடில் 'THE LIST' எனப்படும் மற்றொரு பெயர்ப் பட்டியல் காணப்பட்டதாகவும், அதில் திருமதி முத்துக்குமாரண, ஜகத் சேனவிரத்ன, ஜயரத்ன, அன்டன் ஹேமந்த மற்றும் எலியன் குணவர்தன ஆகிய ஐந்து பேரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். அந்த நபர்களின் தொலைபேசி எண்கள் மற்றும் முகவரிகளும் உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த ஐந்து பெயர்களில் கடைசி நான்கு பெயர்களில் 'அழிக்கும் நோக்கம் கொண்ட வாக்கியம்' உள்ளதாக விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

ஐபாடில் பிரையன் தோமஸின் புகைப்படங்கள் அடங்கிய PDF கோப்பும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், அதில் ஜோசபின் தோமஸ் மற்றும் கிறிஸ்டியன் தோமஸ் ஆகியோரின் பெயர்கள் இருப்பதாகவும் விசாரணை அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளதாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. PDFஇல் ''MOST IMPORTANT WHO IS BEHIND B.T. GET MY MONEY BACK" என்று ஒரு வாக்கியமும் இருந்ததை அதிகாரிகள் வெளிப்படுத்தினர்.

விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்தில் வட்ஸ்அப் செய்திகளை சமர்ப்பித்தனர், இது தினேஷ் ஷாப்டர் மற்றும் பிரையன் தோமஸ் இடையே டிசம்பர் 25, 2019 முதல் டிசம்பர் 15, 2022 வரை, ஷாப்டரின் மறைவு வரை அனுப்பப்பட்டது. பிரையன் தோமஸுக்கு ஷாப்ட்டர் அனுப்பிய சில செய்திகள் நீக்கப்பட்டதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

52 வயதான தினேஷ் ஷாப்டர் கடந்த ஆண்டு டிசம்பர் 15ஆம் திகதி பொரளை மயானத்தில் தனது காரின் சாரதி ஆசனத்தில் கட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டு, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த போது மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப்பிரிவு ஷாப்டரின் மரணம் தொடர்பாக பொரளை பொலிஸாருடன் இணைந்து விசாரணைகளை ஆரம்பித்தது.

தினேஷ் ஷாப்டரின் கொலை தொடர்பாக மொத்தம் 23 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அவரது மனைவி, குடும்பத்தினர் மற்றும் முன்னாள் இங்கிலாந்து கிரிக்கெட் வர்ணனையாளர் பிரையன் தோமஸ் ஆகியோரும் விசாரணையாளர்களிடம் வாக்குமூலம் அளித்தனர்.

இதேவேளை, தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் இறுதி விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, மார்ச் 08 ஆம் திகதி அல்லது அதற்கு முன் நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டுமென்று அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே மரணவிசாரணை அறிக்கை முன்னுக்குப் பின் முரணாக இருப்பதால் அதனை ஏற்றுக்கொள்ளமுடியாதென அவரது குடும்ப சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

## மகா சங்கத்தினரின்...

மைத்ரிபால சிறிசேன நேற்று (09) சபையில் தெரிவித்தார்.

மேலும், மீண்டும் மாவட்ட அபிவிருத்திச் சபைகளை உருவாக்க வேண்டுமென்று தான் பரிந்துரைப்பதாகவும் அவர் அறிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அக்கிராசன உரை தொடர்பான விவாதத்தின் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற நாள் முதல் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைவோம் என்று அழைப்பு விடுத்து வருகிறார். ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானதன் பின்னரும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமைத்துவத்தை ஏற்று, கடந்த ஒன்றரை வருடங்களாக நாட்டைக் கட்யெழுப்புவதற்காக அரசியல் கட்சி பேதமின்றி பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளும் ஒன்றிணைந்து சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைப்போமென்றும் கோரியிருந்தது.

சகல அரசியல் கட்சிகளுடனும் தற்போதைய ஜனாதிபதி, முன்னாள் ஜனாதிபதியுடனும் கலந்துரையாடியிருந்தோம். இருந்தபோதும், இறுதியில் ஆளுந்தரப்பே சர்வகட்சி அரசாங்கத்தை நிராகரித்தது. அதனால், சர்வகட்சி அரசாங்கமொன்று உருவாக்கப்பட்டு நாட்டை கட்டியெழுப்புவதற்கான பணிகள் முன்னெடுக்கப்படுமாக இருந்தால் அதற்கு எங்களின் முழு ஒத்துழைப்பை வழங்குவோம்.

13ஆவது அரசியலமைப்பு தொடர்பில் நாட்டில் பரபரப்பாக பேசப்படுகிறது. ஜனாதிபதியின் அக்கிராசன உரைக்கு முன்பாகவே இந்த திருத்தம் தொடர்பில் பேசப்போவதாக தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

மத்தியில் சமஷ்டி முறையொன்று வேண்டுமென்று வடக்கு தலைவர்கள் கோருகிறார்கள். அதனால், 13ஆவது திருத்தத்துக்கு அப்பாலான தீர்வைப் பெற்றுக்கொடுப்பேன் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பெசில் ராஜபக்ஷ ஆகியோர் ஒப்புக்கொண்டிருந்தார்கள். இவர்களின் ஒப்புதல்களுடனே மேலும் புதிய பிரச்சினைகள் உருவாகின. 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்றால் இந்த நாடு இரண்டாக பிளவுபடும் என்று நீதிமன்றமே அறிவித்திருக்கிறது. இதனடிப்படையில், மாகாணசபை முறை எந்தளவுக்கு சாதகத்தை கொடுத்திருக்கிறது என்பதை சிந்திக்க வேண்டும். நாட்டிலிருக்கும் பிரச்சினைகளை சமாதான முறையில் தீர்த்துக்கொண்டு வடக்கு, கிழக்கு, வடமத்தி, தெற்கு என சகல பிரதேசத்திலிருக்கும் துறைசார்ந்தவர்கள் சமயத் தலைவர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து பிரச்சினைகளுக்கான பரந்துபட்ட கலந்துரையாடலொன்றை முன்னெடுக்க வேண்டும். நாட்டில் இவ்வளவு பிரச்சினை இருக்கும்போது இரு துருவங்களிலும் தீ வைக்கும் வகையிலானவொரு விடயத்தை எதற்காக ரணில் கையில் எடுத்தார் என்பது எனக்கு புரியவில்லை. சிங்கள தமிழ் மக்கள் என்ற வேறுபாடு நாட்டில் இல்லை. அனைவரும் ஒற்றுமையாகவே செயற்பட வேண்டும். சமூகத்தை கட்டியெழுப்பும் சமாதானமான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதனைவிட பாரதூரமான பிரச்சினைகளுக்கு சர்வதேச தலைவர்கள் பேச்சுவார்த்தைகளினூடாக தீர்வு கண்டிருக்கிறார்கள்.

மேலும், மாவட்ட அபிவிருத்தி சபைகள் உருவாக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கிறேன். அதற்கு தேர்தல் எதுவும் அவசியமில்லை. சிங்கள, பௌத்த அமைப்பையோ அல்லது மகா சங்கத்தினரையோ கோபப்படுத்தி பகை உருவாக்கிக்கொண்டு எதுவும் செய்ய முடியாது. நான் ஜனாதிபதியாக இருக்கும் போதும் வடக்குக்கு அநேகமாக சேவைகளை செய்து கொடுத்திருக்கிறேன். இன்னும் சிறியளவு காணிகளே அந்த மக்களுக்கு ஒப்படைக்கவுள்ளதென்றும் கருதுகிறேன். இவற்றுக்கு அப்பால் நாம் செயற்பட்டால் பாரிய நெருக்கடிக்குள்ளாக நேரிடும். இதற்கு அப்பால் சமத்துவமான தீர்மானமொன்று வருவதற்கு வடக்கு தலைவர்கள் முன்வர வேண்டும் என்றார்.

## டயனாவை கைது...

டயனா கமகேவின் குடியுரிமையை சவாலுக்கு உட்படுத்தி சிவில் செயற்பாட்டாளர் ஓஷல ஹேரத் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட கொழும்பு பிரதான நீதவான் நேற்று (09) திறந்த நீதிமன்றில் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

இந்த மனுவை தாக்கல் செய்த ஹேரத், பிரித்தானிய குடியுரிமை காரணமாக டயனா கமகே இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராக பணியாற்ற தகுதியற்றவர் என தீர்ப்பளிக்குமாறு கோரினார்.

இது குறித்து நீதிமன்றில் கருத்து தெரிவித்த ஹேரத்தின் சட்டத்தரணி, இராஜாங்க அமைச்சர் தனது பிரித்தானிய பிரஜாவுரிமையை மறைத்து இலங்கை கடவுச்சீட்டை பெற்றுக்கொண்டதாகவும், பின்னர் அவர் வேறு பிறப்புச் சான்றிதழை சமர்ப்பித்து உத்தியோகபூர்வ கடமைகளுக்காக கடவுச்சீட்டைப் பெற்றதாகவும் தெரிவித்தார்.

இது இலங்கையின் குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டங்களை மீறும் செயலாகும் என தெரிவித்த சட்டத்தரணி, பாராளுமன்ற உறுப்பினர் டயனா கமகே கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட வேண்டுமென குறிப்பிட்டார்.

இராஜாங்க அமைச்சர் டயனா கமகே சார்பில் ஆஜரான சட்டத்தரணி, தனது கட்சிக்காரர் 2014ஆம் ஆண்டுக்கு பின்னர் தனது பிரித்தானிய குடியுரிமையை துறந்ததை சுட்டிக்காட்டி அனைத்து குற்றச்சாட்டுகளையும் நிராகரிப்பதாக நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

இலங்கையின் குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டங்களை மீறினால், கடவுச்சீட்டை பெற்றுக்கொள்வதற்காக இராஜாங்க அமைச்சர் போலி ஆவணங்களை தயாரித்தமை நிரூபிக்கப்பட்டுள்ளதா என கொழும்பு பிரதான நீதவான் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் கேள்வி எழுப்பினார்.

எவ்வாறாயினும், நீதவான் எழுப்பிய மூன்று முக்கிய கேள்விகளுக்கு சிஐடி பதிலளிக்காமல் அமைதியாக இருந்ததால், இந்த விவகாரம் குறித்து விசாரிக்குமாறு சிஐடிக்கு உத்தரவிட்டார்.

அதன் பின்னர் கொழும்பு பிரதான நீதவான், வழக்கை 02 மார்ச் 2023 அன்று விசாரணைக்கு ஒத்திவைத்தார்.

## தொட்டிலையும் ஆட்டி...

தொட்டிலையும் ஆட்டிக்கொண்டு பிள்ளையை கிள்ளிவிடுவதுபோன்று, தீர்வு வழங்குவதாக சர்வதேசத்துக்கு அறிவித்துவிட்டு பேரினவாதிகளை தூண்டிவிடுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பான விவாதம் நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கை - இந்திய ஒப்பந்தம் எழுதப்பட்டு 35ஆண்டுகள் கடந்துவிட்டன. இந்த ஒப்பந்தத்தினூடாக பிரசவிக்கப்பட்ட 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் என்ற குழந்தைக்கு 35 வயதாகிறது. ஆனால், அந்த குழந்தை இருக்கிறதா, இறந்துவிட்டதா எனும் அளவுக்கு நாட்கள் கடந்து கொண்டிருக்கின்றன. இந்த நாட்டிலுள்ள சிங்களத் தலைவர்கள் ஒற்றையாட்சி ஒற்றையாட்சி என்ற ஒரு கோஷத்திலேயே இருக்கிறார்கள். ஆனால், இந்த நாடு இருண்ட யுகத்தை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கின்றது என்பதை உணர தலைப்படுகிறார்களா என்பது புரியவில்லை.

2048ஆம் ஆண்டு இலங்கையை அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்றுவோம் என்று ஜனாதிபதி கூறியிருக்கிறார். ஆனால், 1948ஆம் ஆண்டு நாடு சுதந்திரமடைந்தபோது சிங்கப்பூர், ஜப்பான் போன்ற நாடுகளின் தனிநபர் தலா வருமானம் இலங்கையை விட குறைவாகவே இருந்தது. அந்தக் காலத்திலேயே நாட்டை வளர்க்க முடியாத இலங்கைத் தலைவர்கள் நூறு வருடங்களின் பின்னர் இலங்கை வளர்க்கிறோம் என்று நினைப்பது மிகவும் முட்டாள்தனமான நிலைப்பாடாகும்.

மீண்டும் மீண்டும் ஒற்றையாட்சிக்குள்ளேயே தீர்வு என்ற நிலைப்பாட்டில் இருந்தீர்கள் என்றால் இந்த நாடு ஒருகாலமும் உருப்படாது. அதற்கான வாய்ப்புகளும் இல்லை. அரசியல் தீர்வுவேண்டுமென்றால், இங்கு வாழ்கின்ற இந்த நாட்டுக்கே உரித்தான சகோதர தமிழ் தேசிய இனம் தங்களுடைய உரிமைகளோடும் உரித்துகளோடும் வாழ வேண்டுமென்றால், இந்த நாடு பிளவுப்படா பிரிக்கப்படாத ஒரு நாடாக இருக்க வேண்டுமென்றால் உலகிலுள்ள பல்வேறுபட்ட சமஷ்டி ஆட்சிமுறைகளை எடுத்துப்பார்க்க வேண்டும். அதனடிப்படையில், ஒரு சமஷ்டி முறையிலான ஆட்சி முறையை முன்வைப்பதன் மூலமே நாட்டில் நீதியையும் நியாயத்தையும் உருவாக்க முடியும். இந்த மண்ணில் கிட்டத்தட்ட 3 இலட்சம் வரையிலான தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். 60 ஆயிரத்துக்கும் மேலான போராளிகளை எங்களுடைய மண் இழந்துக் கொண்டிருக்கிறது.

இறுதி யுத்தத்தின்போது, ஏறத்தாழ ஒரு இலட்சத்து 47ஆயிரம் வரையிலான மக்கள் காணாமல் போயும் கொல்லப்பட்டும் இருக்கிறார்கள். இந்த விடயங்கள் எல்லாம் பல்வேறுபட்ட ஆய்வுகளிலும் ஆதாரங்களிலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இந்த நாட்டில் பெரும் இனவழிப்பு இடம்பெற்று முடிந்திருக்கிறது. இழக்க முடியாதளவுக்கு தமிழ் மக்கள் பல்வேறு இழப்புகளை சந்தித்திருக்கிறார்கள். இழப்புகளின் பின்னரும், தமிழர்களும், சிங்களவர்களும் தேசிய இனங்களாக வாழக்கூடிய அரசியல் உரிமைகள் பற்றியே பேசுகிறோம். அரசியல் தீர்வு என்பது அதியுச்ச அதிகாரப் பகிர்வாக இருக்க வேண்டும். அதனை சமஷ்டி அடிப்படையில் மீண்டும் மீண்டும் பறிக்கப்பட முடியாதவொரு நிலைமையே உருவாக வேண்டும் என்றே கோருகிறோம். அதற்கு காரணம் எங்களின் கடந்த கால அனுபவங்களாகும்.

நீதிமன்ற தீர்ப்புகளினூடாகவும், சுற்றறிக்கைகளினூடாகவும் 13ஆவது திருத்தத்திலிருக்கும் பல விடயங்கள் பறிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி இருக்கையில் எவ்வாறு இந்த திருத்தம் முழுமையானதாக இருக்க முடியும். நேற்று முன்தினம் 13ஆவது திருத்தத்துக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டம் செய்து அதனை எரிக்கிறார்கள். ஜனாதிபதியின் ஊக்குவிப்பின்றி அவர்கள் இதனை செய்திருக்க முடியாது. தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளிவிடும் பணியை ரணில் முன்னெடுக்கிறார். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைக் கொடுக்கப் போவதாக சர்வதேச சமூகத்துக்கு அறிவித்துவிட்டு, மறுபுறம் சிங்கள மதவாதிகளையும் பேரினவாதிகளையும் தூண்டிவிடுகிறார்.

ஆகவே, ஜனாதிபதியின் அக்கிராசன உரையானது நாட்டில் அமைதிக்கான, சமாதானத்துக்கான, நிலைத்திருக்கக் கூடிய கௌரவமான அரசியல் தீர்வுக்கான பொருளாதார நெருக்கடிக்கான தீர்வாக அமைந்திருக்கவில்லை. மீண்டும் நாட்டில் யுத்தத்தை ஏற்படுத்தக்கூடிய இருளை நோக்கிய உரையாகவே அமைந்திருந்தது.

13ஆவது அரசியலமைப்பு திருத்தம் குறித்து பிக்குகள் ஒவ்வொரு கருத்துகளை முன்வைக்கிறார்கள். ஆனால், வடக்கு கிழக்கிலுள்ள எங்களின் காணிகளை இராணுவம், சிங்கள மக்கள், விகாரைகள் என பல்வேறு தரப்பினரால் அடாத்தாக கைப்பற்றப்பட்டுள்ளன. வடக்கு, கிழக்கு மக்களின் ஆளுநர்களினால் முன்னெடுக்கப்படும் அடாத்து நடவடிக்கைகளால் தமிழ் மக்களால் வாழ முடியாதிருக்கிறது என்றார்.

## தோட்டத் தொழிலாளர்களுக்கு...

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

பணவீக்கத்தால் ஏற்பட்டுள்ள வாழ்க்கைச் சுமை அதிகரிப்புக்கமைய சம்பள உயர்வு வழங்குமாறு கோரப்படவுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தனது ட்விட்டர் சமூக வலைத்தளத்தில் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

மேலும், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளம் உட்பட இதர விடயங்களை நிர்ணயிக்கின்ற கூட்டு ஒப்பந்தம் தற்போது அமுலில் இல்லை. அதனை புதுப்பிப்பதற்கு தொழிற்சங்கங்கள் முற்பட்டாலும், பெருந்தோட்டக் கம்பனிகள் ஆர்வம் காட்டவில்லை.

இதனால் சம்பள நிர்ணய சபையின் தலையீட்டுடனேயே தொழிலாளர்களின் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டது. எனவே, தற்போதைய வாழ்க்கைச் சுமை அதிகரிப்புக்கமைய, சம்பள உயர்வுக்கான பரிந்துரையை முன்வைக்கும் அதிகாரம் சம்பள நிர்ணய சபைக்கு உள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## சரத் வீரசேகர...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை விளக்க உரை மீதான விவாதம் பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்றபோது கஜேந்திரன் உரை நிகழ்த்தினார்.

"இந்த நாட்டில் சிங்கள பௌத்த மக்களால் இனப்படுகொலை செய்யப்பட்டது. ஜே.ஆர். ஜயவர்தன இந்தியாவுக்கு அடிபணிந்தார். கோட்டாபயவும் மஹிந்தவும் சீனாவுக்கு ஆதரவாக செயற்பட்டதன் காரணமாகவே தோல்வியடைய நேரிட்டது. தற்போதைய ஜனாதிபதி இந்திய – மேற்கு நாடுகளின் ஆதரவாக செயற்படுவதன் காரணமாகவே சர்வதேச உதவிகள் கிடைக்கின்றன.

ஜனாதிபதியின் கொள்கைவிளக்க உரை பாரிய எதிர்பார்ப்பை உருவாக்குவது போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தியிருந்தாலும் தமிழ் மக்களுக்கு நூறு வீத ஏமாற்றத்தைத் தருவதாகவே அமைந்திருக்கின்றது" என அவர் உரை நிகழ்த்தினார்.

இதன்போது குறுக்கிட்ட சரத் வீரசேகர, இவர் இந்த நாட்டை சிங்கள பௌத்த நாடல்ல என்று கூறுகிறார். இவர் குருந்தூர்மலை விகாரையில் ஒரு மலரைகூட வைத்து வழிபடாதவர். சிங்கள மக்களுக்கு வடக்கில் வாழ உரிமையில்லையென்று யாழ்ப்பாணத்தில் கூறிவிட்டு இங்கே வந்து இப்படி உரையாற்றுவதற்கு சிங்கள பௌத்த நாடாக இருக்கின்றமையும் ஒரு காரணம் என்பதை கூறிவைக்க விரும்புகிறேன் என்றார்.

அதற்குப் பதிலளித்த கஜேந்திரன் எம்.பி,

இவரைப்போன்ற இன வெறியர்களாலேயே இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடியது. இப்படிப்பட்டவர்களை விட்டுவிட்டு நல்ல மனிதர்களை மக்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்ய வேண்டும். இனவாதிகளை வைத்துக்கொண்டு நாட்டை மேலும் மேலும் அழிவுப்பாதைக்கு கொண்டுசெல்லாதீர்கள்.

இவர் போன்றவர்களிடம் ஆலோசனை கேட்டதால் தான் கோட்டாபய ராஜபக்ஷ சொந்த நாட்டு மக்களாலேயே விரட்டியடிக்கப்பட்டார். சரத் வீரசேகர என்பவர் அடி முட்டாள். இவருடைய கதைகளைக் கேட்டுதான் கோட்டா, மஹிந்த போன்றவர்கள் வீதிக்கு கொண்டுவரப்பட்டார்கள் எனக் கூறினார்.

## பௌசி எம்.பி.யாக...

அவர் கையொப்பமிட்டார்.

கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஜிபுர் ரஹ்மான் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ததையிட்டு ஏற்பட்ட வெற்றிடத்துக்கு ஏ.எம்.எம்.பௌசி நியமிக்கப்பட்டுள்ளார்.

1937.10.13ஆம் திகதி பிறந்த பௌசி 1959ஆம் ஆண்டு தீவிர அரசியலுக்குள் நுழைந்தார். 1968ஆம் ஆண்டு கொழும்பு நகரின் பிரதி மேயராகத் தெரிவுசெய்யப்பட்ட அவர், 1973ஆம் ஆண்டு 16ஆவது கொழும்பு நகர மேயராகத் தெரிவுசெய்யப்பட்டார். 1993ஆம் ஆண்டு மேல்மாகாண சபைக்குத் தெரிவுசெய்யப்பட்ட பௌசி 1994ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்டுப் பாராளுமன்றத்துக்குத் தெரிவானார். அதன் பின்னர் இவர் பல்வேறு அமைச்சுப் பதவிகளை வகித்துள்ளார்.

## எம்.பிக்களின்...

அனுப்பப்பட்டுள்ளது.

இதன்படி, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான சிக்கல்கள் தொடர்பில் பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தவறியுள்ளதாகவும், அவ்வாறான தேர்தலொன்றை நடத்துவதற்கு அவசியமான அனைத்து முன்நிபந்தனைகள் தொடர்பில் திருப்தியடைய முடியாது எனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் நடவடிக்கையினால் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் மீறப்பட்டிருந்தால், அது தொடர்பில் ஆராய்ந்து உரிய பரிந்துரைகளை வழங்குமாறும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த கடிதத்தின் மூலம் கோரப்பட்டுள்ளபடி, பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் மீறப்பட்டிருந்தால் அது தொடர்பில் ஆராய்ந்து பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கு பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமிப்பதற்கு சட்ட ஏற்பாடுகள் உள்ளன. இதன்படி, சம்பந்தப்பட்ட தெரிவுக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் சபாநாயகரால் நியமிக்கப்படுவதுடன், பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் 101இன் விதிமுறைகளின்படி, குறித்த குழு, ஏழு உறுப்பினர்களைக் கொண்டமையும்.

இந்த தெரிவுக் குழு தனது கோரத்தை நிர்ணயம் செய்யவும், யாரையும் தனக்கு முன் அழைக்கவும், எந்தவொரு நபருக்கும் எந்தவொரு ஆவணம் அல்லது அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கவும், ஆதாரங்களைப் பெறவும், சம்பந்தப்பட்ட துறைகளில் விசேடத்துவம் பெற்றவர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெறவும், காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளை சமர்ப்பிக்கவும் அதிகாரம் உள்ளது.

தெரிவுக் குழுவின் முதல் கூட்டத்தில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் அல்லது பாராளுமன்றம் அறிவிக்கும் திகதியில் குழு தனது அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

# அரசியலமைப்பு ரீதியாக நிறுவப்பட்ட பொறிமுறையாக தேசிய கொள்கை ஆணைக்குழுவை அமைக்க தீர்மானம்

2048ஆம் ஆண்டளவில் இலங்கையை ஒரு நிலைபேறான அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதை இலக்காகக்கொண்ட மூலோபாயங்களையும், தேசிய கொள்கைகளையும் திட்டமிடுதல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மீளாய்வு செய்யும் நோக்கில் தேசிய கொள்கை ஆணைக்குழுவை அமைப்பதற்கான உத்தேச கொள்கைத் திட்டம் குறித்து அண்மையில் (07) கலந்துரையாடப் பட்டது.



குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான தேசிய பேரவையின் உப குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியபோதே இவ்விடயம் குறித்து ஆராயப்பட்டது.

மேற்குறிப்பிட்ட தேசிய பேரவையின் உப குழுவில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கமைய தேசிய கொள்கை ஆணைக்குழுவை அமைப்பதற்கான செயற்குழு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையில் அமைக்கப்பட்டிருந்தது. ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் பிரதமரின் செயலாளர் அநுர திஸாநாயக்க ஆகியோர் ஆணைக்குழு தொடர்பான கருத்தீட்டுப் பத்திரத்தை உபகுழுவிடம் சமர்ப்பித்தனர்.

இந்தக் கருத்தீட்டுப் பத்திரத்தின் பிரகாரம் அமைக்கப்படவுள்ள தேசிய கொள்கை ஆணைக்குழு அரசாங்கத்திற்குள் சட்டரீதியாக பிணைக்கப்பட்ட நிறுவனங்களின் உயர்மட்டத்தில் செயற்படும். பகுப்பாய்வு செய்து கொள்கைகளை வகுத்தல் மற்றும் கொள்கை ரீதியான பரிந்துரைகளை வழங்குதல், 2023 - 2048 ஆண்டுகளுக்கிடையே தேசிய அபிவிருத்திக் கொள்கைக் கட்டமைப்பு, தேசிய அபிவிருத்தித் திட்டம் மற்றும் நடுத்தர குறுகிய கால கட்ட உப தேசிய அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்குதல், அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான வளங்களுக்குரிய பொது மற்றும் தனியார் மூலங்களை அடையாளம் காணுதல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கான பயனுறுதி வாய்ந்த மூலவளப் பங்கீட்டை உறுதிப்படுத்தல், அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் மதிப்பிட்டு முன்னுரிமைப் படுத்தல், அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுதலை கண்காணித்து மதிப்பீடு செய்தல், தேசிய மற்றும் உப தேசிய மட்டங்களிலான முகவர்களை ஒருங்கிணைத்தலும் கூட்டிணைத்தலும் இதன் பணிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதன்படி, ஆணைக்குழுவின் செயற்பாடு களை நிறைவேற்றுவதற்காக ஆணைக்குழு பணியகம் ஒன்றை நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட் டுள்ளதுடன், அதன் நோக்கங்களை நிறை வேற்றுவதற்காக வழிநடத்தல் குழுவும் நிறுவப் படவுள்ளது.

இந்தக் கருத்தீட்டுப் படிவத்தை தேசிய பேரவையில் விரைவில் சமர்ப்பித்துத் தேவையான எதிர்கால பணிகளுக்கு நடவடிக்கை எடுப்பதாக இங்கு கருத்துத் தெரிவித்த உப குழுவின் தலைவர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.






வங்கிக் கடன் வட்டி விகிதத்தைக் குறைக்கக் கோரி அரச ஊழியர் சங்கங்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த போராட்டம் நேற்று தொழில் திணைக்களம் அருகே நடைபெற்றது.

(படப்பிடிப்பு - கிருஷான் காரியவசம்)



துருக்கி மற்றும் சிரியா நாடுகளில் ஏற்பட்ட மிக மோசமான நிலநடுக்கத்தின் விளைவாகப் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் காவுகொள் ளப்பட்டமைக்கு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், இலங்கைக் கான துருக்கியின் தூதுவர் ரகிபே டிமெட் செகேர்சியோக்லுவிடம் அனுதாபம் தெரிவித்த துடன், கொழும்பிலுள்ள துருக்கித் தூதரகத்தில் வைக்கப்பட்டுள்ள நினைவுப் பதிவேட்டிலும் கையெழுத்திட்டார்.



ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் கொழும்பிலுள்ள இலங்கைக்கான துருக்கி தூதுவர் ரகிபே டிமெட் செகேர்சியோக்லுவை சந்தித்து நிலநடுக்கத்தால் பேரழிவை சந்தித்திருக்கும் துருக்கி அரசாங்கத்திற்கும் துருக்கி மக்களுக்கும் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்ததோடு, அனுதாபப் பதிவேட்டிலும் தமது குறிப்பை பதிவிட்டார்.

# புதிய வரிக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஹட்டன் - நுவரெலியாவில் ஆர்ப்பாட்டம்





(செ.திவாகரன், இரா.யோகேசன்)

அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கை உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கவனயீர்ப்புப் போராட்டங்கள் நாடளாவிய ரீதியில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இப்போராட்டத்திற்கு ஆதரவாக நுவரெலியா, ஹட்டன் ஸ்ரீலங்கா ரெலிகாம் நிறுவனத்தின் ஊழியர்களும், அஞ்சல் அலுவலக ஊழியர்களும் இணைந்து கறுப்பு கொடிகளை ஏந்தி, அடையாள கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை மேற் கொண்டனர்.

அரசாங்கத்தின் தற்போதைய வரிக்கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இனிவரும் காலங்களில் இலங்கை அரசு இவ்வாறான அராஜகமான முடிவுகள் எடுக்கக்கூடாது என வலியுறுத்தியும் குறித்த ஊழியர்களால் இந்த ஆர்ப்பாட்டமானது முன்னெடுக்கப்பட்டது.

# புதையல் தோண்டிய சம்பவத்தில் பிக்கு உள்ளிட்ட மூவர் கைது

(அநுராதபுரம் செய்தியாளர்)

அநுராதபுரம் கெப்பித்திகொள்ளாவ லுனுஎட்டுலேவ பகுதியில் புதையல் தோண்டிய சம்பவத்துடன் தொடர்புடைய பிக்கு உள்ளிட்ட மூவரை கெப்பித்திகொள்ளாவ பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றுக் கமைய நேற்று (08) பகல் குறித்த பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேக நபர்களை கைதுசெய்துள்ளதுடன், புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 28, 32 வயதுகளையுடைய பணாமுற மற்றும் கெப்பித்திகொள்ளாவ பகுதிகளை வசிப்பிடமாகக்கொண்டவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் கம்பஹா விகாரையொன்றில் தங்கியிருக்கும் 25 வயதுடைய பிக்கு ஒருவரும் உள்ளடங்குகின்றார் என்பது மேலும் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கெப்பித்திகொள்ளாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சீனாவுக்கான விமான சேவைகளை ஆரம்பிக்கும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்

சீனா தனது எல்லைகளை மீண்டும் திறந்த நிலையில், சீனாவுக்கான வணிக விமானச் செயல்பாடுகள் 2023 ஏப்ரல் மாதம் முதல் வாரத்திலிருந்து தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்போது சீனாவில் ஷாங்காய், பீஜிங் மற்றும் குவாங்சூ ஆகிய இடங்களுக்கு விமான சேவைகள் இடம்பெறவுள்ளன.

ஒவ்வொரு திங்கள், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் கொழும்பிலிருந்து ஷாங்காய்க்கு விமானங்கள் புறப்படும் மற்றும் ஒவ்வொரு செவ்வாய், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் முறையே ஷங்காயிலிருந்து கொழும்புக்கு வர திட்டமிடப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து பீஜிங்கிற்கான விமானங்களும் ஏப்ரல் 3, 2023இல் தொடங்கும். ஒவ்வொரு வாரமும் திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் பீஜிங்கிற்குப் புறப்படும். விமானங்கள் அடுத்த நாட்களில் கொழும்பு திரும்பும் என குறிப்பிடப்பட்டுள்ளது.





ஸ்ரீலங்கன் தற்போது கொழும்பு மற்றும் குவாங்சூ இடையே வாராந்திர விமானத்தை இயக்குகிறது, இரண்டாவது விமானம் மார்ச் 4, 2023 அன்று இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி, வாரத்தின் ஒவ்வொரு செவ்வாய், வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் கொழும்பிலிருந்து குவாங்சோவுக்கான விமானங்கள் இயக்கப்படும் மற்றும் குவாங்சோவிலிருந்து கொழும்புக்குத் திரும்பும் விமானங்கள் ஒவ்வொரு புதன், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் இயக்கப்படும்.

# புகையிரத நிலைய அதிபர்கள் தொழிற்சங்கப் போராட்டம்

## போக்குவரத்து அமைச்சருக்கு கடிதம் மூலம் அறிவிப்பு

உப பொது முகாமையாளர் பதவிக்கு தகுதியற்ற அதிகாரி ஒருவரை நியமித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, உடன் அமுலுக்கு வரும்வகையில் சேவை யிலிருந்து விலகி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக புகையிரத நிலைய அதிபர்கள் சங்கம் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.



குற்றஞ்சாட்டப்பட்டதாகக் கூறப்படும் அதிகாரியை பிரதி பொது முகாமையாளராக நியமித்தால், தொழில் நடவடிக்கை ஆரம்பிக்கப்படுமென புகையிரத நிலைய அதிபர்கள் சங்கத்தின் செயலாளர் கசுன் சாமர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புகையிரத இயந்திர பொறியியலாளர்களின் தொழிற்சங்க சம்மேளனம் நேற்று (09) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி புகையிரத பொது முகாமையாளரிடம் முன்வைக்கப்பட்ட பல விடயங்களுக்கு சாதகமான முடிவுகள் கிடைக்கப்பெறாதமை மற்றும் நியாயமற்ற வரி அறவீடு தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்தத் தொழிற்சங்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அந்த சங்கம் புகையிரத பொது முகாமையாளருக்கு அறிவித்துள்ளது.

## தினசரி பலாபலன்கள்

சுபகிருது வருடம் தை மாதம் 27ஆம் நாள் வெள்ளிக்கிழமை

- **மேஷம்** – நினைத்த காரியத்தில் வெற்றி, நீங்கள் கேட்ட கடன் இன்று கிடைக்கும்.
- **ரிஷபம்** – அதிர்ஷ்டத்தினை சோதித்து பணத்தை இழப்பீர்கள், மனதை சமாதானப்படுத்திக்கொள்ளுங்கள்.
- **மிதுனம்** – வீடு, வாகனத்தால் வீண் செலவுகள் அல்லது தொல்லைகள் ஏற்படும், தாயின் ஆசியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- **கடகம்** – நீண்ட நாள் முயற்சி வெற்றியைக் கொடுக்கும், நண்பர், உறவினர் தொடர்பால் நன்மைகள் உண்டு.
- **சிம்மம்** – வாய் வார்த்தைகளை நிதானமாகப் பிரயோகியுங்கள், கடன் கொடுப்பதும் வாங்குவதும் சிக்கலைத் தரும்.
- **கன்னி** – அலைச்சல்களும் செலவுகளும் நிறைந்த நாள், மனதை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளுங்கள்.
- **துலாம்** – நினைத்த காரியத்தை சிரமமின்றி முடிப்பீர்கள், உடல் பலம், மன நலம் சிறப்பாக இருக்கும்.
- **விருச்சிகம்** – குடும்ப உறவில் சிக்கல் ஏற்படலாம், தேவையற்ற பயணங்களால் வெறுப்படைவீர்கள்.
- **தனுசு** – தொழில் ரீதியில் உங்களுக்குப் பாராட்டுகள் கிடைக்கும், விரும்பிய பெண் உறவால் மகிழ்ச்சியடைவீர்கள்.
- **மகரம்** – புதிய தொழில் வாய்ப்புகள் வந்தமையும், திட்டமிட்ட காரியங்களில் சாதனை செய்வீர்கள்.
- **கும்பம்** – வெளிநாட்டுப் பயணம் நினைத்ததுபோல் நிறைவேறும், உங்கள் சொத்துகளின் மீது கவனம் செலுத்துங்கள்.
- **மீனம்** – ஆலோசிக்காது முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம், கோபத்தால் பொறுமை இழந்துவிடாதீர்கள்.

| | |
|---|---|
| திதி | : சதுர்த்தி மு.ப. 7.58 வரை பின் பஞ்சமி |
| நட்சத்திரம் | : அத்தம் பி.இ. 12.17 வரை பின் சித்திரை |
| யோகம் | : அமிர்த-சித்த யோகம் (சுப காரியம் நன்மை) |
| வார சூலை | : தென் கிழக்குத் திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| நல்ல நேரம் | : மு.ப. 6.33 - 7.33 மணி வரை |
| ராகு காலம் | : 11.03 – 12.33 மணி வரை |
| எமகண்டம் | : 3.33 - 5.03 மணி வரை |
| குளிகை | : 8.03 - 9.33 மணி வரை |
| சந்திராஷ்டமம் | : கும்ப ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| தன அதிர்ஷ்டம் | : கார்த்திகை, உத்தரம், உத்தராடம் (பிறந்தவர்களுக்கு) |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739


## செலான் வங்கி பீ.எல்.சி.

1990ஆம் ஆண்டின் 4-ம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9-ம் பிரிவின் கீழ் நடைபெறும் ஏலவிற்பனை

**செலான் வங்கி (பீ.எல்.சி) – பல்லேகெலே கிளை**
**பெறுமதி மிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏலவிற்பனை**

கண்டியில் PV100440 என்ற இலக்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட ஒரு கம்பனியான றோயல் பெக் லங்கா (பிரைவேட்) லிமிட்டட் மற்றும் கண்டியைச் சேர்ந்த நிலீமா ஸஜீவனி சமரசிங்ஹ கடப்பாடுடையதாகவும்/ ஈடுவைத்தவராகவும் செலான் வங்கியின் சார்பாக பிரசித்த நொத்தாரிசு திருமதி ஜே.கே.நவரத்னவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.01.19ஆம் திகதியிடப்பட்ட 1942ஆம் இலக்க முறி மீதான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதாதலால்

**2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு செலான் வங்கி பீ.எல்.சி. மூலம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு செலான் வங்கி பீ.எல்.சி. இல.90, காலி வீதி, கொழும்பு 03 இல் உள்ள வங்கியின் வளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.**

இந்த ஏல விற்பனையானது சுகாதார அமைச்சின் கொவிட் 19 நெறிமுறைகளை பின்பற்றுவதற்கான கண்டிப்பான வழிகாட்டலுக்கு ஏற்ப நடத்தப்படும்.

**அட்டவணை**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில், பாத்ததும்பர உடகம்பஹா கோரளவில் குண்டசாலை பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவிற்குள் நத்தரம்பொத்த கிராமசேவகர் பிரிவின் எல்லைக்குள், அமைந்துள்ள 'படிவத்த எஸ்டேட்' என அழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் என்.பீ.டி.வேத்தேவவினால் வரையப்பட்ட 2017.01.18ஆம் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 3364A இல் காட்டப்பட்டுள்ள பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பதினொரு தசம் நான்கு ஐந்து பேர்ச்சஸ் (ஏ0.ரூ0.பே.11.45) அத்தோடு மதிப்பீட்டு வரி இலக்கம் 8/6B ஐக் கொண்ட வீடொன்று உட்பட அதிலமைந்திருக்கும் அனைத்துடனான காணித்துண்டு.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி –** கண்டி நகரத்திலிருந்து, திகன வீதி வழியாக குண்டசாலையூடாக சுமார் 4.5 கி.மீற்றர் நத்தரம்பொத்த வரைக்கும் சென்று, ஏர்ள்ஸ் ரிஜென்சி ஹோட்டலைக் கடக்கும் போதுள்ள வளைவில் வலது பக்கத்தில் குறிப்பிட்ட இடம் காணப்படுவதோடு திகன வீதியில் வரி மதிப்பீட்டிலக்கங்களான 12 மற்றும் 12/1 ஐக் கொண்ட இடத்திற்கு முன்னால் அமைந்திருக்கின்றது.

**தீர்மான முடிவு அறிவித்தல்கள் –** 2019.06.28ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியையும் 2019.06.26ஆம் திகதிய டெய்லி மிரர், லங்கா தீப ஆகிய பத்திரிகைகளிலும் மற்றும் 2019.06.28ஆம் திகதிய தினக்குரல் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம் -** உத்தேச கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்.
(1) கொள்வனவு விலையின் 10%; (2) உள்ளூராட்சி மன்ற வரி 1%;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5%;
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 3000/-;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம்;
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பர செலவுகள்;
மிகுதி 90% வீதத்தையும், இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு, ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

**உரித்துறுதி,** ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களை பெற்றுக்கொள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும்.

பிரதான முகாமையாளர், (சட்டம்), செலான் வங்கி பீ.எல்.சி., இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி இலக்கங்கள்; 011- 2456485, 011-2456479, 011-2456473

சந்திமா பிரியதர்ஷனீ கமகே,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பீட்டாளர் மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர்.

இல. 9-i, ஹைலெவல் வீதி,
சர்வோதய மாவத்த, பனாகொட, ஹோமாகம.
தொலைபேசி இலக்கம் 071-4318252

தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, பெப்ரவரி 10ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# துருக்கியின் துயர நிலைமை!

துருக்கி - சிரியாவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 20 ஆயிரத்தைத் தாண்டலாம் என்று சில தினங்களுக்கு முன்னர் உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்ட தகவல் உண்மையாகிவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. அந்த இரண்டு நாடுகளிலும் இலட்சக்கணக்கான மக்கள் காயமடைந்து, இடம்பெயர்ந்து வீடு, வாசல்களை இழந்துள்ளதாக வரும் தகவல்கள் துயரத்தையும் அதிர்ச்சியையும் அளிக்கின்றன. அண்மைக்காலமாக அதிகளவில் உயிர்ச்சேதத்தையும், பொருட்சேதத்தையும் ஏற்படுத்திய நிலநடுக்கமாக இது கருதப்படுகிறது.

மத்தியகிழக்கு நாடான துருக்கியின் தென்பகுதியிலுள்ள கொக்ரமன்மராஸ் மாகாணத்தில் பஸார்சிக் என்ற நகரத்தை மையமாகக்கொண்டு நிலத்துக்கு அடியில் கடந்த திங்கட்கிழமை அதிகாலை இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவுகோலில் 7.8 அளவில் பதிவான நிலநடுக்கம், துருக்கியின் 10 மாகாணங்களிலும், அண்டைநாடான சிரியாவிலும் பாதிப்பை ஏற்படுத்தியது. நிலநடுக்கத்துக்கு பிந்தைய அதிர்வுகளும் பலமுறை ஏற்பட்டன.

நிலநடுக்கம் அதிகாலையில் ஏற்பட்டதால் பெரும்பாலான மக்கள் தூக்கத்திலேயே உயிரை இழந்தனர். சக்திவாய்ந்த நிலநடுக்கம் என்பதால் சில விநாடிகளிலேயே ஆயிரக்கணக்கான கட்டடங்கள் சீட்டுக்கட்டுபோல் சரிந்து தரைமட்டமாகிவிட்டன. அதிர்வை உணர்ந்து பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்குக்கூட நேரமின்றி கட்டட இடிபாடுகளுக்குள் மக்கள் சிக்கிக்கொண்டனர்.

நிலநடுக்கத்தால் துருக்கியில் மட்டும் 10,500இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கின்றனர். நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதிகளில் 2.3 கோடி பேர் பாதிப்புக்குள்ளாகி இருப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. துருக்கி பேரிடர் மேலாண்மைத் துறையுடன் வெளிநாடுகளைச் சேர்ந்த மீட்புக் குழுக்களும் மீட்புப் பணியில் இணைந்துள்ளன. இருப்பினும், மின்சாரம் துண்டிப்பு, உறைநிலைக்கும் கீழான கடும் குளிர் போன்றவை மீட்புப் பணிக்கு சவாலாக அமைந்துள்ளன. “பசியாலோ, நிலநடுக்கத்தாலோ நாங்கள் சாக மாட்டோம்; கடுங்குளிர் எங்களைக் கொன்றுவிடும்'' என நிலநடுக்கத்தில் குடியிருப்புகளை இழந்த மக்கள் கதறுவது பெரும் சோகம்.

துருக்கி - சிரியா எல்லையையொட்டி ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் இரு நாடுகளுக்கும் பெரும் சோதனையை ஏற்படுத்தியிருக்கிறது. உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட சிரியாவைச் சேர்ந்த சுமார் 30 இலட்சம் அகதிகளுக்கு துருக்கி புகலிடம் அளித்துள்ளது. சிரியாவைச் சேர்ந்த அதிக எண்ணிக்கையிலான அகதிகளுக்கு அடைக்கலம் அளித்திருக்கும் நாடு துருக்கிதான். அத்துடன், இப்போதைய நிலநடுக்கத்தால் சுமார் 2 கோடிக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டிருப்பது வேதனையிலும் வேதனை.

சுமார் 12 ஆண்டுகளாக உள்நாட்டுப் போரால் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ள சிரியாவில் நிலைமை இன்னும் மோசம். சிரியாவில் அரச கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் 1,250 பேரும், கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டிலுள்ள வடமேற்கு பகுதியில் 1,250இற்கு மேற்பட்டோரும் உயிரிழந்துள்ளனர்.

துருக்கியில் 60,000 மீட்புப் பணியாளர்கள் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள நிலையில், போர்ப் பதற்றம் நிலவும் சிரியாவில் மீட்புப் பணிகளில் ஈடுபடுவதற்கு போதுமான ஆட்கள் இல்லை. ரஷ்ய ஆதரவு படையினரால் சூழப்பட்டுள்ள கிளர்ச்சியாளர்களின் பகுதிகளுக்கு சர்வதேச உதவிகள் சென்றடைவதிலும் தாமதம் ஏற்படும் எனத் தெரிகிறது.

புவித்தகடுகள் ஒன்றுடனொன்று உராயும் பகுதியில் துருக்கி பிராந்தியம் அமைந்துள்ளதால் அங்கு நிலநடுக்கங்கள் ஏற்படுவது புதிதல்ல. ஆனால், தொழில்நுட்பமும் அறிவியலும் அபரிமிதமாக வளர்ச்சியடைந்துள்ள இந்தக் காலத்தில், நிலநடுக்கங்களுக்கு தாக்குப்பிடிக்கும் வகையில் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. இருப்பினும், துருக்கியில் இப்போது ஏற்பட்ட நிலநடுக்கத்தில் “பான்கேக் சரிவு'' என்றழைக்கப்படும் முறையில் கட்டடங்கள் இடிந்து விழுந்துள்ளதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

7.8 ரிச்டர் அலகுகள் பதிவான நிலநடுக்கம் சக்திவாய்ந்தது தான் என்றாலும், இந்தளவுக்கு அதிக உயிர்ச்சேதம் ஏற்பட்டதற்கு மோசமான கட்டடங்கள்தான் காரணம் என்றும், இந்த விவகாரத்தில் அலட்சியம் காட்டுவது கொலைக் குற்றத்துக்கு சமம் என்றும் ஜனாதிபதி எர்டோகன் குற்றஞ்சாட்டியுள்ளார். பெரும்பாலான கட்டடங்களின் அடிப்பகுதி வலுவிழந்து நொறுங்கியதால் வெடிகுண்டுகளை வைத்து தகர்த்ததுபோல் கட்டடங்கள் தரைமட்டமாகியுள்ளன.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட துருக்கி, சிரியாவுக்கு தேவையான உதவிகள் வழங்கப்படும் என அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய யூனியன் நாடுகள் உறுதியளித்து மீட்புக் குழுக்களையும் அனுப்பியுள்ளன. ஜனாதிபதி ரணில், துருக்கி ஜனாதிபதி எர்டோகனுடன் பேசி ஆறுதல் தெரிவித்திருக்கிறார். இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்தாலும் ஆபத்திலுள்ள நண்பன் ஒருவனுக்கு உதவும் மனப்பான்மையில், தேவையான உதவிகளை செய்வதாக இலங்கை உறுதியளித்திருப்பது வரவேற்கத்தக்கது. இதில் நகையாடல்களுக்கு இடமில்லை.

சிரியாவின் உள்நாட்டுப் போரில் அரச படைகளுக்கு ஆதரவாக ரஷ்யாவும், கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக அமெரிக்காவும் செயல்பட்டு வருகின்றன. இரு நாடுகளும் உதவ முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது. சீனா, ஜப்பான், ஐக்கிய அரபு அமீரகம், பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளும் தங்களது மீட்புக் குழுவினரையும், நிவாரணப் பொருட்களையும் துருக்கிக்கு அனுப்பிவைத்துள்ளன.

நிலநடுக்கத்தின் பாதிப்புகளிலிருந்து துருக்கி மீண்டெழும் என ஜனாதிபதி எர்டோகன் நம்பிக்கை தெரிவித்துள்ளார். வழங்கப்படும் சர்வதேச உதவி அந்த நம்பிக்கையை வென்றெடுக்கும் என்கிற உறுதியை ஏற்படுத்தியுள்ளது. எர்டோகன் காத்திரமான அரசியல் தலைவர். துருக்கியை பல நெருக்கடிகளிலிருந்து மீட்டவர் அவர். துருக்கி மீண்டும் எழவேண்டும். பாதுகாப்பான வழிமுறைகளைக் கையாண்டு இப்படியான அனர்த்தங்களால் பாதிப்புகளைக் குறைக்கும் ஏற்பாடுகளை துருக்கி மட்டுமல்ல, இதர நாடுகளும் மேற்கொள்தல் வேண்டும். துருக்கி மக்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களும் ஆறுதல்களும்.

# கடலுக்குள் பேனா: கருணாநிதி விரும்பியிருப்பாரா?



‘அந்தப் பேனா!’ - தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதியின் வாழ்வில் திருப்புமுனையாக, அவரை பெரியாரிடம் கொண்டுசேர்க்க ‘அடி’த்தளமிட்ட, அவர் எழுதிய கட்டுரையின் தலைப்பு இது.

‘சாந்தா அல்லது பழனியப்பன்’ என்கிற தன்னுடைய முதல் நாடகத்தை 1945இல் புதுச்சேரியில் அரங்கேற்றியபோது, அங்கிருந்து வெளியான ‘தொழிலாளர் மித்திரன்’ இதழில், காந்தி அடிகளின் ஆசிரமத்தில் தொலைந்துபோன பேனாவைப்பற்றி, ‘அந்தப் பேனா!’ கட்டுரையை கருணாநிதி எழுதியிருந்தார். அக்கட்டுரையின் விளைவால் கடுமையாகத் தாக்கப்பட்டுக் காயமுற்ற கருணாநிதியை அரவணைத்துக்கொண்ட பெரியார், அவரை ஈரோட்டுக்கு அழைத்துச் சென்று, ‘குடி அரசு’ இதழில் அமர்த்தினார்.

ஓராண்டுக் காலம் ‘குடி அரசு’வில் எழுதிவந்த கருணாநிதியை, ‘ராஜகுமாரி’ படத்துக்குக் கதை, வசனம் எழுத வைத்தவர் இயக்குநர் ஏ.எஸ்.ஏ.சாமி. தொடர்ந்து ‘அபிமன்யூ’, ‘மருதநாட்டு இளவரசி’, ‘மந்திரி குமாரி’, ‘பராசக்தி’, ‘மனோகரா’ என கருணாநிதியின் பேனா குடித்த மை, சுமார் 25 படங்களுக்குக் கதை, வசனத்தை எழுதித் தள்ளியது.

அண்ணாவின் தம்பியாக, அடுத்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக அசைக்க முடியாத சக்தியாகத் தமிழ்நாட்டில் நிலவப்போகும் கருணாநிதியின் ஆற்றல், அவரது பேனாவில் அடங்கியிருந்தது. இன்று, கருணாநிதியின் நினைவாகக் கடலுக்குள் நிறுவ முன்மொழியப் பட்டிருக்கும் பேனா நினைவுச்சின்னம், பல்வேறு விவாதங்களை எழுப்பியுள்ளது.

**கடலுக்குள் பேனா:** “தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதியின் சாதனைகளை, சிந்தனைகளைப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில், காமராஜர் சாலையில் அண்ணா நினைவிட வளாகத்தில் 2.21 ஏக்கர் பரப்பளவில் ரூ.39 கோடி (இந்திய ரூபா) மதிப்பீட்டில் நினைவிடம் அமைக்கப்படும்” எனத் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், 2021இல் சட்டமன்றத்தில் அறிவித்தார். இதைத் தொடர்ந்து, நினைவிடம் அமைந்துள்ள இடத்துக்குப் பின்பக்கம், கடற்கரையிலிருந்து சுமார் 360 மீ. உட்புறமாக, கடலுக்குள் 134 அடி உயரத்துக்குப் பேனா வடிவ நினைவுச்சின்னம் அமைப்பதற்குத் தமிழ்நாடு அரச பொதுப் பணித் துறையின் சார்பில் முன்மொழியப்பட்டது.

இதற்கு, தமிழ்நாடு கடலோர மண்டல மேலாண்மை ஆணையமும் ஒப்புதல் வழங்கியது. ரூ.81 கோடி செலவில் அமையவுள்ள இந்த நினைவுச்சின்னத்தை, கருணாநிதியின் நினைவிடத்திலிருந்து சென்றடையும் வகையில் 290 மீ. தூரத்துக்குக் கடற்கரையிலும் 360 மீ. தூரத்துக்குக் கடலிலும் என 650 மீ. தொலைவுக்குப் பின்னல் நடைபாலமும் (lattice bridge) அமைக்கப்படவுள்ளதாகத் திட்டத்தின் செயல் குறிப்புரை தெரிவிக்கிறது.

**வரலாற்றை எழுதிய பேனா:** ரி.எம்.கருணாநிதி, அதாவது - திருக்குவளை முத்துவேலர் கருணாநிதி என்கிற பெயரில் பன்னிரண்டு வயதில், கருணாநிதி எழுதிய நாவலான ‘செல்வச்சந்திரா’வில் தொடங்கி, இன்றும் வெளிவரும் ‘முரசொலி’யாகப் பரிணமித்த கையெழுத்து ஏடான ‘மாணவ நேச’னில் உருப்பெற்ற அவரது எழுத்து, அண்ணாவின் ‘திராவிட நாடு,’ பெரியாரின் ‘குடி அரசு’ ஆகியவற்றில் உரம்பெற்றது. அரசியல் களத்தில் நின்று போராடத் தனக்குத் தேவையான ஒரு ‘படைக்கல’னாக கருணாநிதி தன் எழுத்தைக் குறிப்பிடுகிறார்; அந்தவகையில், நவீன தமிழ்நாட்டைக் கட்டமைத்த கருவிகளில் ஒன்றாக அவரது பேனாவைக் கருத இடமிருக்கிறது.

‘‘சர்க்கஸ்காரன் உயரத்தில் இருந்தாலும் அவனது சிந்தனை பூமியிலேயே இருக்கும் என்பதைப்போல, தம்பி கருணாநிதி சினிமாவில் இருந்தாலும் சிந்தனை எப்போதும் அரசியலில்தான்” என ‘அன்பகம்’ திறப்பு விழாவில் அண்ணா பேசினார். சினிமாவில் இருந்தாலும் அரசியலில் இருந்தாலும் கருணாநிதியின் சிந்தனை முதன்மையாக எழுத்தில்தான் இருந்திருக்கிறது என்பது வாழ்நாளெல்லாம் அவர் எழுதியவற்றை ஒட்டுமொத்தமாகத் திரட்டிப் பார்க்கும்போது தெரிகிறது: சமூக நாவல்கள் 10, சரித்திர நாவல்கள் 6, எழுதி-நடத்திய நாடகங்கள் 21, கவிதை நூல்கள் 8, உடன்பிறப்புக்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பு 12 (1990களிலேயே நின்றுவிட்டது), தன் வரலாற்று நூலான ‘நெஞ்சுக்கு நீதி’ தொகுதிகள் 6 (2006இற்குப் பிறகு எழுதவில்லை), சிறுகதைகள் 37, பயண நூல் 1, உரை நூல்கள் 6 என விரிவும் ஆழமும் கொண்ட கருணாநிதியின் நூற்றொகை உள்ளபடியே திகைப்பை ஏற்படுத்துகிறது.



**நினைவுச்சின்னம் தவறா?:** சரியாக 50 ஆண்டுகளுக்கு முன், சென்னை அண்ணாசாலையில் அமைந்த மேம்பாலத்துக்கு அண்ணாவின் பெயரைச் சூட்டி, திறந்துவைத்துப் பேசிய அப்போதைய முதலமைச்சர் கருணாநிதி, “அண்ணா அவர்களுடைய பெயரை இந்தப் பாலத்திற்கு ஏன் வைத்தோம் என்பதற்கான காரணத்தைச் சொல்லத் தேவையில்லை. ஏனென்றால், அண்ணா அவர்களுடைய பெயரை வைத்த பிறகு, அதை ஏன் வைக்க வேண்டும் என்று கேள்வி கேட்கிற யாரும் தமிழகத்தில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை” என்றார்.

அதேபோல் 2009இல்,அண்ணாவின் நூற்றாண்டை முன்னிட்டு ரூ.172 கோடி மதிப்பீட்டில் உருவான அண்ணா நூற்றாண்டு நூலகத்தைத் திறந்துவைத்துப் பேசிய கருணாநிதி, ‘‘வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம் புத்தகச் சாலைக்குத் தரப்பட வேண்டும்'' என்கிற அண்ணாவின் வானொலி உரையை (1948) நினைவுகூர்ந்தார். நூலக வாயிலில் நிறுவப்பட்ட புத்தகம் வாசிக்கும் அண்ணாவின் சிலையில் இந்த வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது. தற்போது, அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் போலவே, கருணாநிதியின் நினைவாக ரூ.114 கோடி மதிப்பீட்டில் ‘கலைஞர் நூலகம்’ மதுரையில் உருவாகிக்கொண்டிருப்பது பாராட்டுக்குரிய முன்னெடுப்பு.

இந்தப் பின்னணியில், நவீன தமிழ்நாட்டின் தளகர்த்தர்களில் அண்ணாவுக்கு அடுத்துவந்த கருணாநிதியின் நினைவாக, ஒரு பேனா நினைவுச்சின்னமாக அமைவது எல்லா வகையிலும் பொருத்தப்பாடுடையது என்பதில் இருவேறு கருத்துகள் இருக்க முடியாது. ஆனால், மேம்பாலம், நூலகம் எனத் தமிழ்நாட்டில் அண்ணாவின் பெயரால் அமைந்த பல்வேறு நினைவுச்சின்னங்கள் மக்களின் அன்றாடப் பயன்பாட்டில் கலந்துவிட்டதைப்போல், கடலுக்குள் அமையவிருக்கும் பேனா நினைவுச்சின்னத்தால் ‘ஆய பயன் என்கொல்’ என்கிற பொதுச் சமூகத்தின் கேள்வி, எளிதில் கடந்துவிட முடியாதது.

எனினும் சுற்றுலா, நேரடி-மறைமுக-சேவை வேலைவாய்ப்பு, சர்வதேச அடையாளம் போன்றவற்றை இத்திட்டம் கொண்டுவரும் நன்மைகளாக, அதன் செயல் குறிப்புரை பட்டியலிடுகிறது. ஆனால், நினைவுச்சின்னம் அமையும் கடற்பகுதியின் சுற்றுச்சூழல் காலப்போக்கில் திரிந்துவிடும் அபாயத்தையும் தாண்டி கரைக்கடல், நடுக்கடல் மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்தும் அபாயத்தையும் இந்தப் பேனா (நினைவுச்சின்னம்) கொண்டிருக்கிறது என்பது பெரும் கவலைக்குரியது.

**கடல் அரிப்பும் மீனவர்களும்:** தேசிய கடற்கரை மதிப்பீட்டு அமைப்பின் அங்கமான கடலோர ஆராய்ச்சிக்கான தேசிய மையத்தின் (NCCR) அறிக்கை, தமிழ்நாட்டுக் கடற்கரைகளில் ஏற்பட்டுள்ள கடல் அரிப்பு குறித்த அபாயகரமான புள்ளிவிவரங்களை வழங்குகிறது. 991.47 கி.மீ. நீளம் உள்ள தமிழ்நாட்டுக் கடற்கரையில், 422.94 கி.மீ. தொடர்ச்சியாகக் கடல் அரிப்பை எதிர்கொண்டுள்ளது. மேற்கு வங்கம் (60.5%), புதுச்சேரி (56.2%), கேரளம் (46.4%) ஆகிய மாநிலங்களைத் தொடர்ந்து மிக மோசமான கடலரிப்புக்கு உள்ளாகியிருக்கும் நான்காவது மாநிலமாகத் தமிழ்நாடு (42.7%) உள்ளது.

1990 முதல் 2018 வரையிலான காலகட்டத்தில், ஒட்டுமொத்தமாக 1,802 ஹெக்டேயர் நிலத்தைக் கடலரிப்பால் தமிழ்நாடு இழந்துள்ளது. இந்தத் தகவல்கள் அடங்கிய தமிழ்நாட்டுக்கான கடலோர மாறுதல்கள் வரைபடத்தை வெளியிட்டவர், கருணாநிதியின் பேனா நினைவுச்சின்னத்தை முன்மொழிந்துள்ள தமிழ்நாடு பொதுப்பணித் துறையின் அமைச்சர் எ.வ.வேலுதான்.

சுற்றுச்சூழல் பிரச்சினைகள், காலநிலை மாறுபாடு, அரசின் கொள்கைகள் போன்றவற்றால் மீனவர்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள் தனிக் கட்டுரையாக எழுதப்பட வேண்டியது. கூவம் கழிமுகத்திலிருந்து அடையாறு கழிமுகம் வரையிலான மெரினாவின் போக்கில் 13 மீனவக் கிராமங்கள் உள்ளன. ஆனால், பேனா நினைவுச் சின்னத்துக்கான திட்ட உருவாக்கத்தில், மீனவர்களிடம் கலந்தாலோசிக்கப்படவில்லை என்று அறிய முடிகிறது. இந்தப் பின்னணியில்தான், ஜனவரி 31 அன்று இத்திட்டம் குறித்த மக்கள் கருத்துக் கேட்புக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அழைப்பு விடுத்திருக்கிறது.

காலநிலை மாற்றத்தின் பின்னணியில், மாறிவரும் சுற்றுச்சூழலின் தன்மைக்கேற்ப புதிய கட்டுமானங்களையும் வளர்ச்சிப் பணிகளையும் திட்டமிடும் கட்டாயம் தற்போது ஏற்பட்டுள்ளது. ஆனால் வளர்ச்சி, மேம்பாடு, அழகுபடுத்துதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களை முன்னிட்டு, சுற்றுச்சூழல் விதிகள் தளர்த்தப்பட்டு, விலக்களிக்கப்பட்டு வருவதும் தொடர்கிறது. தலைவர்களை, அவர்களின் சாதனைகளைப் போற்றும், நினைவுகூரும் நினைவுச்சின்னங்கள் அவசியம்தான். ஆனால், அவற்றுக்குக் கொடுக்கப்போகும் விலை என்ன என்பதுதான் கேள்வி.

காலத்துக்கேற்பத் தம்மைத் தகவமைத்துக் கொள்ளும் ஆற்றல் பெற்ற கருணாநிதி, ஒருவேளை இன்றிருந்திருந்தால், சுற்றுச்சூழல் பிரச்சினைகளின் பின்னணியில் தனக்கான நினைவுச்சின்னம் எவ்வளவுதான் புதுமையாக இருந்தாலும் இப்படி ஓர் இடத்தில் வேண்டாம் என உடன்பிறப்புகளுக்குக் கடிதமெழுதப் பேனாவை எடுத்திருப்பார் அல்லவா!

நன்றி - இந்து தமிழ்

## இன்றைய நாளில்..

- 1815 – கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றும் நோக்கில் பிரித்தானியர் கண்டியினுள் நுழைந்தனர்.
- 1897 – மடகஸ்காரில் மதச் சுதந்திரம் அறிவிக்கப்பட்டது.
- 1948 – இலங்கையின் முதலாவது நாடாளுமன்றம் குளொஸ்டர் கோமகன் இளவரசர் என்றியினால் கொழும்பு, சுதந்திர சதுக்கத்தில் திறந்து வைக்கப்பட்டது.
- 1969 – தமிழ் நாட்டின் முதலமைச்சராக மு. கருணாநிதி தெரிவுசெய்யப்பட்டார்.
- 1991 – வன்னி மீதான இலங்கை இராணுவத்தினரின் வன்னி விக்கிரம படையெடுப்பு விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டதுடன், ஹெலிகொப்டர் ஒன்றும் சுட்டு வீழ்த்தப்பட்டது.
- 2009 – தகவல் தொடர்பு செயற்கைக்கோள்கள் இரிடியம் 33, கொஸ்மஸ் -2251 ஆகியன விண்வெளியில் மோதி அழிந்தன.

## நக்கல் நமசிவாயம்

நீ அடிக்கிறமாதிரி அடி... நான் அழுறமாதிரி அழுறன் எண்டதுபோல இருக்குது ரணிலின் அறிவிப்பும் அவரின் செயற்பாடுகளும்...



# ஆறாயிரம் கோடி ரூபா முதலீட்டில் கனடாவின் சூரிய மின்சக்தி திட்டம்



150 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கை ரூபா பெறுமதியில் சுமார் 6,000 கோடி ரூபா பாரிய முதலீட்டில் 100 மெகாவோட் சூரிய சக்தி மின்திட்டத்தை நிறுவ கனடாவிலுள்ள ஒரு நிறுவனம் முன்வந்துள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான நிலாவெளியிலுள்ள காணியில் பாரியளவிலான சூரிய சக்தித் திட்டம் நிர்மாணிக்கப்படவுள்ளதுடன், அது தொடர்பான எரிசக்தி உரிம அனுமதி கடிதம் கடந்த வருடம் வழங்கப்பட்டது.

இலங்கை வானொலி கூட்டுத்தாபன வளாகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் இது தொடர்பான கடிதம் வழங்கப்பட்டதுடன், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன, கனடாவிலுள்ள நிறுவனத்தின் பிராந்திய பணிப்பாளர் மொஹமட் ஹுசைன் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

# குடிவரவு-குடியகல்வுத் திணைக்களத்தின் பாதுகாப்புக்காக பொலிஸ் அதிகாரிகள் குழு

பத்தரமுல்லையில் அமைந்துள்ள குடிவரவு-குடியகல்வுத் திணைக்களத்தின் பிரதான காரியாலயத்திற்கு கடவுச்சீட்டு பெறுவதற்கு நாளாந்தம் சுமார் 5,000 பேர் வருவதால், கடவுச்சீட்டு விண்ணப்ப நிலையத்தில் தலைமை பொலிஸ் பரிசோதகர் அடங்கிய பொலிஸ் குழுவொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக வந்த சிலர் நேற்று முன்தினம் (8) அநாகரீகமாக நடந்துகொண்டமையினால் திணைக்களத்தின் கோரிக்கைக்கமைவாக பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், பிரதான பொலிஸ் பரிசோதகர் உட்பட ஆறு பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

வரிசையில் நிற்கும் மக்களை சேவை பகுதிக்கு அழைத்துச் செல்வது மற்றும் துணைக் கட்டுப்பாட்டாளர்களுக்கு அவர்களை வழிநடத்துவது போன்ற அனைத்து கட்டுப்பாடுகளும் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளன.

குடிவரவு-குடியகல்வுத் திணைக்களம் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளிலும் பெருமளவிலான மக்கள் காணப்படுவதோடு, குறித்த திணைக்களத்திடம் அதற்கான முறையான திட்டம் இன்மையால் மக்கள் மிகவும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

நிர்வாகப் பணிகளை பொலிஸாரிடம் ஒப்படைத்ததன் மூலம் மக்களுக்கு வசதிகள் ஏற்பட்டுள்ளதாக கடவுச்சீட்டு பெறுவதற்காக திணைக்களத்திற்கு வந்த ஒருவர் தெரிவித்தார்.

இவ்வருடம் (2023) நடைபெறவுள்ள கொரிய மொழித் திறன் தேர்வுக்கான நுழைவுச் சீட்டுகள் வழங்கும் பணி எதிர்வரும் திங்கட்கிழமை (13) ஆரம்பமாகவுள்ளதாகவும், அதற்கான கடவுச்சீட்டைப் பெறுவதே இந்த நெரிசலுக்குக் காரணம் எனவும், அவசர தேவைகளுக்காக மாத்திரமே இவ்வாறு கடவுச்சீட்டு ஒருநாள் சேவையில் வழங்கப்படும் எனவும் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# இன ஒற்றுமைக்குப் பங்கம் ஏற்படுத்துவோருக்கு ஒருபோதும் இடங்கொடுக்கப்போவதில்லை

## வலப்பனை பிரதேச சபை தமிழ் உறுப்பினர்கள் தெரிவிப்பு

(ஆ.ரமேஸ்)

வலப்பனை பிரதேச சபைக்குரிய மாகுடுகலை வட்டார மக்களுக்கிடையே காணப்படும் ஐக்கியத்திற்கு பங்கம் ஏற்படுத்தும் வகையில் யார் செயற்பட்டாலும் அதற்கு ஒருபோதும் இடங்கொடுக்கப்போவதில்லை - என வலப்பனை பிரதேச சபை உறுப்பினர்களான பெ. சண்முகம், அ.ஹரிச்சந்திரன், குகநேசன் ஆகியோர் தமது கண்டனத்தை தெரிவித்தனர்.

வலப்பனை பிரதேச சபையின் மாதாந்த சபை அமர்வு தலைவர் ஆனந்த ஹித்தட்டியகே தலைமையில் நேற்றுமுன்தினம் காலை வலப்பனை பிரதான காரியாலய கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றபோதே இந்தக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

மாகுடுகலை வட்டாரத்தில் 533/I கிராம சேவகர் பகுதியில் கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக ஐக்கிய மரணாதார சமுர்த்தி ஒன்று இப்பிரதேச அனைத்து இன மக்களின் ஐக்கியத்துடனும், அங்கத்துவத்துடனும் இயங்கி வருகின்றது. இவ்வாறு இயங்கிவரும் இச் சமுர்த்தியின் அங்கத்தவர்களின் நிதியில் மரணச்சடங்குகளுக்கு தேவையான 10 இலட்சத்திற்கு அதிகமான உபகரணங்கள் பெறப்பட்டு அதை நபர் ஒருவரின் வீட்டில் அறையொன்றில் வைத்து பாதுகாக்கப்பட்டு வருகிறது.



இந்நிலையில், உபகரணங்கள் வைக்கப்பட்டுள்ள வீட்டு உரிமையாளர் தனது வீட்டை புனரமைக்கும் நடவடிக்கையில் ஈடுப்பட்டுள்ளதால் உபகரணங்களை அங்கிருந்து அகற்றுமாறு சமுர்த்தி நிர்வாகத்திற்கு அறிவித்துள்ளார்.

அதேநேரத்தில் பொதுமக்களின் நன்மைக்காக பெற்றுள்ள 10 இலட்சத்திற்கு அதிகமான உபகரணங்களை தனியாக பாதுகாக்க இப் பிரதேச மக்களுக்குரிய பொது மயான பூமியை அண்மித்த தரிசு இடம் ஒன்றில் தனியாக கட்டடம் ஒன்றை ஐக்கிய மரணாதார சமுர்த்தி நிர்வாகம் தமது பணத்தில் அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்துடன், இக்கட்டடம் அமைத்துக்கொள்வதற்காக வலப்பனை பிரதேச சபையின் அனுமதியை கோரி சமுர்த்தி நிர்வாகம் உத்தியோகபூர்வ கடிதமொன்றை சபைத் தலைவருக்கு வழங்கியுள்ளது. இக் கடிதம் சபை அமர்வில் சபை உறுப்பினர்களின் அனுமதிக்காக சபை செயலாளர் எஸ்.பி.சகலசூரிய ஊடாக சமர்ப்பிக்கப்பட்டு வாசிக்கப்பட்டது.

அதேநேரத்தில் குறித்த கட்டடத்தை மயான பூமியில் அமைக்கப்படும் பட்சத்தில் இடவசதி குறைவடையும் என காரணங்காட்டி, பிரதேச சபை இதற்கு அனுமதி வழங்க கூடாது என மாகுடுகலை பௌத்த விகாரதிபதி ஒருவர் பிரதேச மக்களுக்கிடையில் காணப்படும் ஐக்கியத்திற்கு பங்கம் ஏற்படும் வகையில் தனது தனிப்பட்ட எதிர்ப்பைத் தெரிவித்து சபைத் தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதமும் அங்கு வாசிக்கப்பட்டது.

இந்நிலையில், பௌத்த விகாராதிபதி அனுப்பிவைத்த கடிதத்திற்கு எதிர்ப்பைத் தெரிவித்த மேற்குறித்த தமிழ் உறுப்பினர்கள் மரணாதார சமுர்த்தி நிர்வாகம் மயான பூமியை அண்மித்த ஒதுக்கப்பட்ட இடத்தில்தான் கட்டடம் அமைக்கவுள்ளது என தெரிவித்ததுடன், சமுர்த்தி நிர்வாகம் வழங்கிய கடிதத்திற்கமைய சபைத் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள் மயான பூமிக்கு விஜயம் செய்து அங்கு சாதக,பாதக தன்மையை அறிந்து கட்டடம் அமைக்க அனுமதி வழங்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர்.

# பிரித்தானியாவிலுள்ள இலங்கைத் தூதரகம் முன்பாக சுதந்திர தினத்தன்று ஆர்ப்பாட்டம்




இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, பிரித்தானியாவிலுள்ள இலங்கைத் தூதரகம் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டமொன்று இடம்பெற்றது.

புலம்பெயர் தமிழின செயற்பாட்டாளர்களின் ஏற்பாட்டில் சுதந்திர தினத்தன்று குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது, "இலங்கையின் சுதந்திர நாள் தமிழர்களின் கரிநாள், இனப்படுகொலைக்கு நீதி வேண்டும், அரசியல் கைதிகளை விடுதலை செய், இலங்கை அரசாங்கத்திற்கு பிரித்தானியா அழுத்தம் கொடுக்க வேண்டும்" என எழுதப்பட்ட சுலோக அட்டைகளையும் கொடிகளையும் ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டத்தில் புலம்பெயர் தமிழின செயற்பாட்டாளர்கள் பலரும் உணர்வெழுச்சியுடன் கலந்துகொண்டனர்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு குறித்து சமூக ஊடகங்களில் பரப்பப்படும் தவறான தகவல்கள்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மூலம் இலங்கைக்கு டொலர்கள் கிடைப்பதை தடுக்கும் அரசியல் சதி, சமூக ஊடகங்கள் ஊடாக முன்னெடுக்கப்படுவதாக உரிமம்பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் சங்கத்தின் செயலாளர் முகம்மட் பாரூக் மரிக்கார் குற்றஞ்சாட்டுகிறார்.

சமூக ஊடகங்கள் மூலம் தவறான தகவல்களை வழங்குவதன் மூலம், இலங்கை இளைஞர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் சட்டப்பூர்வமாக வெளிநாட்டு வேலைகளுக்கு விண்ணப்பிப்பதில் இருந்து தவிர்த்துக்கொள்வதாக தமது தொழிற்சங்க அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளதாகவும் பாரூக் கூறினார்.

# இளைஞர் பாராளுமன்ற வெளிவிவகார பிரதியமைச்சர் இலங்கைக்கான மாலைதீவு தூதரக அதிகாரி சந்திப்பு



இளைஞர் பாராளுமன்றத்தின் வெளிவிவகார பிரதி அமைச்சர் அஹ்மத் சாதிக் இலங்கைக்கான மாலைதீவு தூதரக அதிகாரியை சந்தித்தார்.

இளைஞர் பாராளுமன்றத்தின் வெளிவிவகார பிரதி அமைச்சர் அஹ்மத் சாதிக், இலங்கைக்கான மாலைதீவின் தூதரக இரண்டாம் செயலாளர் பவாஸ் அன்வரை கொழும்பில் அமைந்துள்ள மாலைதீவு தூதரகத்தில் சந்தித்தார்.

இச்சந்திப்பில் இலங்கையினதும் மாலைதீவினதும் வெளிவிவகார மற்றும் இராஜதந்திர உறவுகளின் நிலைமை தொடர்பாகவும் இளைஞர்களுக்கான வெளிவிவகார வாய்ப்புகள் உட்பட கல்வி, கலை, விளையாட்டு மற்றும் தலைமைத்துவம் போன்ற துறைசார் வகிபாகங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் இக்கலந்துரையாடலின்போது மாலைதீவின் இரண்டாம் செயலாளர் பவாஸ் அன்வர், எதிர்காலத்தில் இலங்கையிலுள்ள இளைஞர்களுக்கு கலைத்துறையில் ஒத்துழைப்புகளை வழங்கமுடியும் எனக் குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடலின் பின்னர், இரு நாடுகளினதும் உறவு இளைஞர் களின் ஊடாகவும் மேலும் வலுப்படுத்த சிறந்த நடவடிக்கைகள் எதிர் காலங்களில் எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

# புத்தளம் சேரக்குளியில் 239 கிலோ கடலட்டைகள், 921 கிலோ சுறா செட்டைகளுடன் இருவர் கைது







புத்தளம் சேரக்குளி பகுதியில் 239 கிலோ கிராம் கடலட்டைகள், 921 கிலோ கிராம் எடையுடைய சுறா செட்டைகளுடன் சந்தேக நபர்கள் இருவர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடலட்டைகள் மற்றும் சுறா செட்டைகள் கடத்திச் செல்லப்படுவதாக கற்பிட்டி விஜய கடற்படைப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய நேற்று (09) அதிகாலை புத்தளம் சேரக்குளி பகுதியில் சந்தேகத்திற்கிடமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த இரண்டு லொறிகளை கடற்படையினர் சோதனையிட்டனர்.

இதன்போது லொறிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கடலட்டைகள் மற்றும் சுறா செட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

இதன்போது சந்தேகத்தின்பேரில் 41 வயதுடைய எலுவாங்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவரும் 48 வயதுடைய புத்தளத்தைச் சேர்ந்த ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 4 உரப் பைகளில் 239 கிலோ கிராம் கடலட்டைகளும் 19 உரப் பைகளில் 921 கிலோ கிராம் எடையுடைய சுறா செட்டைகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

இதன்போது சந்தேக நபர்களையும் கைப்பற்றப்பட்ட கடலட்டைகள் மற்றும் சுறா செட்டைகளையும் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட இரண்டு லொறிகளையும் கட்டுநாயக்க சுங்கத் திணைக்களத்தினரிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கற்பிட்டி விஜய கடற்படையினர் தெரிவித்தனர்.



**15,000இற்கும் அதிகமான உயிரிழப்புகளை ஏற்படுத்திய துருக்கி நிலநடுக்கத்தையடுத்து, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று (09) காலை இலங்கையிலுள்ள துருக்கி தூதரகத்திற்கு சென்று, இலங்கை மக்களின் பிரார்த்தனைகள் துருக்கிய அரசாங்கத்துடனும் மக்களுடனும் இருப்பதாக அனுதாபப் புத்தகத்தில் கையெழுத்திட்டார்.**

# கினிகத்தேனை வீடொன்றில் தாயும் மகளும் சடலங்களாக மீட்பு



கினிகத்தேன, பெரகமுல்ல பகுதியில் உள்ள வீடொன்றில் தாயும் அவரது மகளும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தாயையும் மகளையும் பல நாட்களாக காணவில்லை எனவும், வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசுவதாகவும் அயலவர்கள் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

அதன்படி, நேற்று (9) காலை பொலிஸார் வந்து பார்வையிட்டபோது தாயும் மகளும் உயிரிழந்த நிலையில், காணப்பட்டதாக தெரிவித்தனர்.

50 வயதுடைய தாயும் 30 வயதுடைய அவரது மகளுமே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த 50 வயதுடைய பெண்ணின் கணவரும் மகனும் கொழும்பில் பணிபுரிவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 09.02.2023 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 137 383 | 148 1282 |
| கனேடியன் டொலர் | 154 8383 | 166 0360 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 0624 | 44 067 |
| யூரோ | 267 4711 | 288 47 |
| ஜப்பான் யென் | 1 61 7 | 1 7171 |
| சிங்கப்பூர் டொலர் | 158 4818 | 17 526 |
| ஸ்ரேலிங் பவுன் | 321 4231 | 338 75 |
| சுவிஸ் பிராங் | 276 7876 | 3 42 72 |
| ஐ.அ.டொலர் | 248 3 8 | 26 1675 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 848 8321 |
| குவைட் | குவைட் தினார் | 0,072 7645 |
| ஓமான் | ஓமான் றியால் | 83 88 |
| கட்டார் | கட்டார் றியால் | 88,1546 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 3450 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 4222 |

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன்கிழமை 2023.02.08
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5025 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 25,272,363.00
ஆங்கில எழுத்து Z — வெற்றி இலக்கங்கள் 4 4 6 4 5 5

கொவிசெத (Govisetha) — சீட்டிழுப்பு இலக்கம் 3267 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 77,553,762.80
ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 14 36 37 69

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1480 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,331,089.20
வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 1 3 1 0 3 3

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1055 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 82,613,986.80
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 10 32 47 80

ராசி சுப பலன் (Handahana) — சீட்டிழுப்பு இலக்கம் 334 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,669,769.20
வெற்றி இலக்கினம் விருச்சிகம் — வெற்றி இலக்கங்கள் 07 33 36 39 — விசேட இலக்கினம் விருச்சிகம்

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1373 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 298,809,298.00
ஆங்கில எழுத்து B — சுப்பர் இலக்கம் 02 — வெற்றி இலக்கங்கள் 22 24 36 44
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# வடமாகாணத்தில் வங்கி ஊழியர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்




நியாமற்ற வரிச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு முழுவதும் நேற்று முன்தினம் (08) வங்கி ஊழியர்கள் அரை நாள் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்துவந்த நிலையில், யாழ். இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினர் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் முன்பாக பிற்பகல் 12.30 மணிமுதல் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (யாழ். நிருபர்)




நியாயமற்ற வரிச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு முழுவதும் நேற்று முன்தினம் (08) வங்கி ஊழியர்கள் அரை நாள் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்துவந்த நிலையில், வவுனியா இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினர் வவுனியா - கண்டி வீதியில் அமைந்துள்ள கார்கில்ஸ் பூட்சிட்டிக்கு முன்பாக மதியம் 01.00 மணிமுதல் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (வவுனியா நிருபர்)




நியாயமற்ற வரிச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு முழுவதும் நேற்று முன்தினம் (08) வங்கி ஊழியர்கள் அரை நாள் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்துவந்த நிலையில், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 9 வங்கிகளைச் சேர்ந்த ஊழியர்கள் மன்னார் மாவட்ட செயலகம் மற்றும் மன்னார் பிரதான சுற்றுவட்ட பகுதியில் மதியம் 01.00 மணிமுதல் அடையாள கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (மன்னார் நிருபர்)

## யாழ். மாநகர சபை உறுப்பினர் றெமீடியஸ் விபத்தில் படுகாயம்



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில், சிறுப்பிட்டி பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் யாழ். மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி மு.றெமீடியஸ் படுகாயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது, வீதியின் குறுக்கே சென்ற நாய் ஒன்றுடன் மோதியே விபத்திற்குள்ளானதில், தலைக்கவசம் கழன்றமையால் தலையில் பலத்த காயத்திற்கு இலக்காகியுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள றெமீடியஸ் அவசர சிகிச்சைப் பிரிவில் சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

## அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் யாழ்ப்பாண கம்பன் விழா

(சாவகச்சேரி நிருபர்)

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் யாழ்ப்பாண கம்பன் விழா பெப்ரவரி 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 11ஆம் திகதி சனிக்கிழமை, 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபம் மற்றும் நல்லை ஆதீன கலாமண்டபம் ஆகிய இடங்களில் காலை மாலை நிகழ்வுகளாக இடம்பெறவுள்ளன.

கம்பன் விழாவின் ஆரம்ப நிகழ்வு இன்று (10) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் சி.ஸ்ரீசற்குணராஜா தம்பதியினர் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை தம்பதியினர் ஆகியோரின் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பிக்கவுள்ளது.

இந்நிகழ்வில் அதிதிகளாக யாழ். இந்திய துணைத்தூதர் ராஜேஷ் நட்ராஜ் மற்றும் வடமாகாண அவைத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மூன்று நாள் இடம்பெறவுள்ள கம்பன் விழா நிகழ்வுகளில் சமயத் தலைவர்கள், வைத்திய நிபுணர்கள், இலங்கை மற்றும் ஏனைய நாடுகளைச் சேர்ந்த பேச்சாளர்கள், அரசியல் தலைமைகள், பேராசிரியர்கள், நிர்வாகிகள், வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்கள் பங்கேற்கவுள்ள அதேவேளை, இலக்கிய ஆணைக்குழு, சிந்தனை அரங்கம், பட்டி மன்றம், விவாத அரங்கம், வழக்காடு மன்றம் மற்றும் மங்கல இசைக்கச்சேரி ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

குறித்த நிகழ்வுகளை தமிழ் இலக்கிய ரசிகர்கள் அனைவரும் கண்டுகளிக்க முடியும் என யாழ்ப்பாண கம்பன் கழக செயலாளர் கஜரூபன் அறிவித்துள்ளார்.

## ஹெரோயினுடன் இரு இளைஞர்கள் கைது

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம், நெல்லியடி இமையாணன் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில், ஹெரோயின் போதைப்பொருளுடன் இரு இளைஞர்கள் நெல்லியடி பொலிஸ் நிலைய விசேட புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் மற்றும் நல்லூர் பிரதேசங்களைச் சேர்ந்த 24, 27 வயதான இரு இளைஞர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து சுமார் 63 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன், சந்தேகநபர்கள் பயன்படுத்திய மோட்டார்சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## பொது சுகாதார அதிகாரிகள் நல்லதண்ணி நகரில் சோதனை



(மஸ்கெலியா செய்தியாளர்)

நல்லதண்ணி நகரில் உள்ள உணவகங்கள் மற்றும் இனிப்புப் பண்டங்கள் விற்பனை செய்யும் நிலையங்களில் பொது சுகாதார அதிகாரிகள் நேற்றைய தினம் சுற்றிவளைப்பை மேற்கொண்டு பாவனைக்குதவாத பொருட்கள் மற்றும் தின்பண்டங்கள் ஆகியவற்றை அழித்தனர்.

கடந்த நவம்பர் மாதம் பௌர்ணமி தினத்தன்று ஆரம்பமான சிவனொளிபாதமலை பருவகாலம் சுமார் மூன்று மாதங்கள் கடந்த நிலையில் அதிக எண்ணிக்கையிலான யாத்திரிகர்கள் வருகை தந்தனர்.

இதனால் நல்லதண்ணி நகரில் உள்ள பிரதான உணவகங்கள், விருந்தினர் விடுதிகள், இனிப்புப் பண்டங்கள் விற்பனை நிலையம் போன்றவற்றில் விற்பனைக்கு உதவாத பொருட்களைக் கைப்பற்றி அழித்து அதன் உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



கம்பளை தொலுவ பிரதான வீதியில் தலதா மாளிகையின் புராதன சின்னங்கள் பாதுகாக்கப்பட்ட வணக்கஸ்தலத்திற்கு அருகில் மதுபானசாலை திறந்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் அதனை உடனடியாக அகற்றக்கோரி வலியுறுத்தியும் 14 விகாரைகளின் விகாராதிபதிகள் 8 கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்களும் இணைந்து பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொண்டனர். (படப்பிடிப்பு: கம்பளை மேலதிக நிருபர்)

## உக்குவளையில் மாணவர்களுக்கு போட்டி நிகழ்ச்சி

(உக்குவளை செய்தியாளர்)

உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலை முன்னாள் அதிபரும் மானாம்பொட ஜும்ஆ மஸ்ஜித் நிர்வாக பொருளாளருமான எம்.நிஸ்பரின் ஆலோசனையில் சமூக ஆர்வலர்களைக் கொண்டு சமீபத்தில் 'பிராந்திய கல்வி அபிவிருத்திச் சங்கம்' ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலம் பிரதேச பாடசாலை மாணவர்களின் கல்வியறிவு வளர்ச்சியோடு அவர்களின் ஒழுக்க விழுமியங்களையும் முன்னேற்றும் நோக்கில் சில நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளது.

இதன் முதற்கட்டமாக உக்குவளை பிரதேசத்திலுள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளில் தரம் 11இல் கற்கும் மாணவர்களிடையே போட்டி நிகழ்ச்சிகளை நடத்தி அதில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசுகளையும் வழங்க முன்வந்துள்ளது.

இந்தப் போட்டி நிகழ்ச்சிகள் எதிர்வரும் மார்ச் 5ஆம் திகதி ஞாயிறன்று காலை 9.00 மணிக்கு உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலையில் நடைபெறுமெனவும் இதற்கான விண்ணப்பங்கள் குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அதிபர் எம். நிஸ்பர் தெரிவித்துள்ளார்.

## 13ஆவது திருத்தம் தொடர்பில் சிங்கள மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை

### அமைச்சர் ஜீவன் தெரிவிப்பு

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் சகோதர சிங்கள மக்கள் அச்சம் கொள்ள வேண்டியதில்லை. மாகாணசபை முறைமை என்பது வடக்கு, கிழக்குக்கு மட்டும் உரித்தானது அல்ல. நாட்டில் ஏனையப் பகுதிகளில் உள்ள மக்களும் அந்த முறைமையின் ஊடாக சிறந்த சேவையைப் பெறலாம் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அக்கிராசன உரையானது காலத்தின் கட்டாய தேவையாகும். அதிலுள்ள விடயங்களை அமுல்படுத்துவதற்கு காங்கிரஸ் முழு ஆதரவையும் வழங்கும் எனவும் அவர் கூறினார்.

எட்டியாந்தோட்ட எக்கலாஸ் கீழ்ப்பிரிவு தோட்டத்தில் முன்னாள் சப்ரகமுவ மாகாண சபை உறுப்பினரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவருமான அண்ணாமலை பாஸ்கரன் ஏற்பாட்டில் மக்கள் சந்திப்பு நேற்றுமுன்தினம் குறித்த தோட்டத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் கலந்து கொண்டார்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசின் கொள்கைத்திட்டத்தை முன்வைத்து உரையாற்றினார். முக்கிய பல விடயங்களை எடுத்துரைத்திருந்தார். அவற்றில் குறிப்பாக மலையக மக்களுக்கு பிரஜாவுரிமை கிடைக்கப் பெற்றிருந்தாலும், பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் தொடர்பில் பல்வேறு சிக்கல்கள் இன்னும் எஞ்சியுள்ளன. இவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மலையக எம்.பிக்களுடன் பேச்சு நடத்தப்படும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். அதேபோல அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் சேவைகளையும் அவர் நினைவு கூர்ந்திருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அக்கிராசன உரையை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வரவேற்கின்றது. அவற்றில் உள்ள விடயங்களை அமுல் படுத்த முழு ஆதரவும் வழங்கப்படும். அத்துடன், மலையக மக்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக கூடுதல் கவனம் செலுத்தப் படும்.

வடக்கு, கிழக்கில் மக்களின் காணிகள் விடுவிக்கப்படும், இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்ற முக்கிய விடயத்தையும் குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதி இவ்வாறு உரையாற்றும் போது 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு எதிராக சிலர் கருத்துகளை வெளியிட்டுள்ளனர். 13 அநீதியானது எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். 13ஆவது திருத்தச்சட்டம் என்பது வடக்கு, கிழக்குக்கு மட்டும் உரித்தானதல்ல. இலங்கையில் உள்ள ஏனைய மாகாணங்களுக்கும் அதிகாரத்தை தரக்கூடிய பொறிமுறையாகும். அதன்மூலம் மக்கள் பிரச்சினைகளை இலகுவில் தீர்க்கலாம். எனவே, 13 குறித்து உருவாக்கப்பட்டுள்ள போலி விம்பத்தை சிங்கள மக்கள் நம்பக்கூடாது'' - என்றார்.

# சீனாவிலிருந்து இவ்வாரம் வரவிருந்த 36 ஆயிரம் மெட்ரிக் தொன் பொஸ்பேட் உரம் நிராகரிப்பு

## தரமின்மையே காரணமென விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

சீனாவிலிருந்து இந்த வாரத்திற்குள் வரவிருந்த 36 ஆயிரம் மெட்ரிக் தொன் டிரிபிள் சுப்பர் பொஸ்பேட் (TSP) உரத்தை தரமின்மை காரணமாக இலங்கை நிராகரித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

"சீனாவிலிருந்து அனுப்பப்பட்ட TSP உர மாதிரிகள் தரம் குறைவாக இருந்ததால் நாங்கள் அதை நிராகரித்தோம்" என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

"மற்ற நாடுகள் இந்த வகை உரங்களைப் பயன்படுத்தினாலும், நாங்கள் உயர் தரத்துடன் மட்டுமே வாங்குகிறோம், அவற்றை விவசாயிகளின் கைகளில் கொடுக்க முடியாது.''

கடந்த மாதம் மூன்றாவது வாரத்தில் TSP உரம் நாட்டை வந்தடைய திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், உக்ரைன் உர ஏற்றுமதியை நிறுத்திய பிறகு, பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்ள முடியவில்லை.

பெப்ரவரி இரண்டாம் வாரத்திற்குள் உரம் நாட்டை வந்தடையும் என அமைச்சர் கடந்த மாதம் தெரிவித்திருந்தார்.

இந்நடவடிக்கையானது எதிர்வரும் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு TSP உரம் வழங்குவதில் தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளது.



# பாடசாலை அனுமதிக்காக 3 இலட்ச ரூபா இலஞ்சம் பெற முயன்ற ஆசிரியர் கைது

மாணவர் ஒருவரை பாடசாலையில் சேர்த்துக் கொள்வதற்காக 3 இலட்ச ரூபாவை இலஞ்சமாகக் கோரிய, குருநாகலிலுள்ள பிரதான பாடசாலை ஒன்றின் ஆசிரியர் ஒருவர், இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த பாடசாலையின் உயர்தர கலைப் பிரிவுக்குப் பொறுப்பான தலைமை ஆசிரியரே நேற்று முன்தினம் (8) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவரை உயர்தர கலைப் பிரிவில் சேர்த்துக்கொள்வதற்காக 3 இலட்ச ரூபாவை மாணவனின் தந்தையிடம் கோரிய ஆசிரியர், அதனை பெற்றுக்கொள்வதற்காக குருநாகல் நகருக்குச் சென்றபோது, இலஞ்ச - ஊழல் விசாரணை அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார்.

குறித்த மாணவரின் தந்தை செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த ஆசிரியர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரான ஆசிரியர், குருநாகல் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# முதலீட்டை மேற்கொள்வதற்கு அவசியமான காணிகளை விடுவிப்பதிலுள்ள பிரச்சினைகள் குறித்து அவதானம்

## பாராளுமன்ற விசேட குழுவில் கலந்துரையாடல்

முதலீடுகளை ஆரம்பிக்கும்போது பொருத்தமான முறையில் காணிகளை விரைவில் விடுவித்துக்கொள்வதில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் இலங்கையின் வணிக தொழில்முயற்சிகளை இலகுபடுத்தும் சுட்டெண்ணின் பெறுமானத்தை அதிகரிப்பது தொடர்பில் எழுந்துள்ள நடைமுறைச் சிக்கல்களையும் சிரமங்களையும் ஆய்வுசெய்வதற்கும் அது தொடர்பில் முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக் குழு பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் கூடியபோது இது தொடர்பில் நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டது. காணி மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு, கைத்தொழில் அபிவிருத்திச் சபை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் வெளிவிவகார அமைச்சின் பொருளாதார விவகாரப் பிரிவு ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

நாட்டில் காணி விடுவிப்பதிலுள்ள சிக்கலான முறைமையினால் அதிக காலஅவகாசம் தேவைப்படுவதாகவும் முதலீட்டாளர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகவும் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார். எனவே, முதலீட்டுக்கான வாய்ப்புகளை எளிதாக்காவிட்டால் பிராந்தியத்தின் ஏனைய நாடுகளுக்கு முதலீடுகள் ஈர்க்கப்படுவதைத் தடுக்கமுடியாது போய்விடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளின் உரிமை மற்றும் அவற்றின் சட்ட விவகாரங்கள் தொடர்பாக பல கட்டளைச் சட்டங்களின் கீழ் பல நிறுவனங்கள் தனித்தனியாக இருப்பது குழுவில் விவாதிக்கப்பட்டது. இதன் காரணமாக, காணிகளின் வகைப்படுத்தல் அதனைக் கட்டுப்படுத்தும் நிறுவனங்களின்படி அல்லாமல் முதலீட்டிற்கு ஏற்ற ஒவ்வொரு பகுதிக்கும் தொடர்புப்படி வகைப்படுத்தல் செய்யப்பட வேண்டும் என்றும் குழு வலியுறுத்தியது.

அத்துடன், இந்நாட்டில் காணி தொடர்பான சரியான தரவுகளைப் பூர்த்திசெய்யாத பிரச்சினை குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. எனவே, நவீன டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் சரியான



தரவுகளை ஒரே இடத்தில் கொண்டுவந்து, மிகக் குறுகிய காலத்தில் முதலீடுகளுக்கு ஏற்ற காணிகளை விடுவிப்பது தொடர்பில் கட்டமைப்பொன்று தயாரிக்கப்பட வேண்டும் என்று குழு கருத்துத் தெரிவித்தது.

தற்போதுள்ள சட்ட விதிகளுக்குள்ளும் முதலீட்டுக்குத் தேவையான காணிகளை வழங்குவதில் விசேட கவனம் செலுத்தி சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் அதிகாரிகள் திறமையாக செயற்படவேண்டியதன் அவசியத்தையும் குழு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

மேலும், கைத்தொழில் அபிவிருத்திச் சபை, இலங்கையில் தொழில் முயற்சிகளை இலகுபடுத்தல் சுட்டியை அதிகரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் வழிமுறைகள் குறித்தும் குழுவிற்கு விரிவாக விளக்கமளித்தது.

இதில் இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார், பாராளுமன்ற உறுப்பினர்களான சஞ்சீவ எதிரிமான்ன மற்றும் லலித் வர்ண குமார ஆகியோர் கலந்துகொண்டனர்.

# 4 அத்தியாவசியப் பொருட்கள் சதொசவில் விலை குறைப்பு

லங்கா சதொச 4 அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை நேற்று (09) குறைத்துள்ளது.

இதன்படி, வட்டானா பருப்பு, ஒரு கிலோ கிராமின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ள நிலையில், அதன் புதிய விலை 305 ரூபாவாகும்.

சிவப்பரிசி ஒரு கிலோ கிராமின் விலை 05 ரூபாவினால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 164 ரூபாவாகும்.

இதேவேளை, ஒரு கிலோ கிராம் இறக்குமதி செய்யப்படும் வெள்ளை பச்சை அரிசி விலை 05 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 179 ரூபாவாகும். அவ்வாறே, ஒரு கிலோகிராம் வெள்ளை நாட்டரிசி விலை 04 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 180 ரூபாவாகும்.

# பட்டதாரி ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் வெளியீடு

தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்கு பட்டதாரி ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

40 வயதுக்குட்பட்ட பட்டதாரிகளும், அரச சேவையில் ஏதேனும் ஒரு பதவியில் பணிபுரியும் பட்டதாரிகளும் விண்ணப்பிக்கலாம் என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

உயர் (A/L) தரங்களுக்கு கற்பித்தலை நடத்துவதற்காக அதிக எண்ணிக்கையிலான ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

ஏனைய பட்டதாரிகளுக்கு இணையாக எஞ்சிய மற்றும் உருவாகும் வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மாகாண சபைகள் மேற்கொள்ளும்.

# வெடிபொருட்களுடன் பதுளையில் ஒருவர் கைது

பதுளை, கந்தகெட்டிய, மாலியத்த பிரதேசத்தில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 51 ஜெலிக்னைட் குச்சிகள், 20 நூல்கள், 15 கிலோ கிராம் அமோனியா ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் சந்தேகத்தின்பேரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மாலியத்த பிரதேசத்தில் சந்தேக நபரின் வீட்டை சோதனையிட்ட போது வெடிபொருட்கள் மற்றும் உபகரணங்களுடன் சந்தேக நபரை கைதுசெய்துள்ளனர்.

சந்தேகநபரை பதுளை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# கிராம உத்தியோகத்தர் மீது தாக்குதல்

பொலன்னறுவை மணிக்கூட்டுக் கோபுர பகுதியில் கிராம உத்தியோகத்தரை நபரொருவர் தாக்கியதில் காயமடைந்த கிராம உத்தியோகத்தர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பொலன்னறுவை நகர கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள வீதி தொடர்பான பிரச்சினை காரணமாகவே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொலன்னறுவை மாவட்ட செயலாளர், அவரின் வாகனத்தில் உரிய இடத்திற்கு அழைத்துச் சென்றதாக தாக்குதலுக்குள்ளான கிராம உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

பின்னர் குறித்த காணி பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு அவர் தனக்கு ஆலோசனை வழங்கியபோதிலும் தற்போது நிலவும் சட்டப்பிரச்சினையால் அதனை தீர்க்க முடியவில்லை என கிராம உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

ஆனால், பிரச்சினையைத் தீர்த்துவிட்டு வந்து தன்னை மீண்டும் சந்திக்குமாறு அறிவுறுத்திவிட்டு மாவட்ட செயலாளர் அவ்விடத்தை விட்டுச் சென்றதையடுத்து, ஒரு தரப்பினரால் தாக்கப்பட்டதாக கிராம உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இது தொடர்பில் பொலன்னறுவை மாவட்ட செயலாளர் டபிள்யூ.ஏ.தர்மசிறியிடம் வினவியபோது அவர் தம் மீதான குற்றச்சாட்டை நிராகரித்தார்.

இதேவேளை, மாவட்ட செயலாளரின் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொலன்னறுவை தமன்கடுவ பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராம உத்தியோகத்தர்கள் சுகயீன விடுமுறையில் ஈடுபடவுள்ளதாக இலங்கை கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் நெவில் விஜேரத்ன தெரிவித்தார்.

# காக்கை தீவு கடற்கரையில் ஆணொருவரின் சடலம் மீட்பு



மட்டக்குளி, காக்கை தீவு கடற்கரையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று (09) கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் தொடர்பில் இதுவரை அடையாளம் கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

# 5 கிலோ வல்லப்பட்டை வைத்திருந்த நபர் கைது

## 40 ஆயிரம் ரூபா அபராதம்

(கெலும் குணதிலக்க)

05 கிலோ கிராம் வல்லப்பட்டை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான சந்தேக நபருக்கு மொனராகலை மாவட்ட நீதவான் மற்றும் நீதவான் ஏ.எல்.சஜினி அமரவிக்கிரம 40 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

பதல்கும்புர கரடாகம யதிமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த அதஹனகே பிரதீப் சஞ்சீவ என்பவருக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. சந்தேக நபர் அவரது வீட்டில் வல்லப்பட்டை வைத்திருந்தபோது பொலிஸார் அவரை கைதுசெய்திருந்தனர்.

# பொலிஸ் சீருடை அணிந்திருந்த நால்வர் நிட்டம்புவவில் கைது

நிட்டம்புவ, மாஇம்புல பிரதேசத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என்று கூறிக்கொண்ட நால்வர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் (08) இரவு சந்தேகத்திற்கிடமான கார் ஒன்றை சோதனையிட்டபோது குறித்த சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களை கைதுசெய்யும்போது அவர்களில் இருவர் பொலிஸ் சீருடை அணிந்திருந்ததாகவும், எனினும், அவர்கள் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அல்லவென்பதை உணர்ந்ததால் அந்த இருவர் உட்பட நால்வரையும் கைதுசெய்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர்களிடமிருந்து ஒரு ஜோடி கைவிலங்கு மற்றும் 3 போலி இலக்கத் தகடுகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 25, 26, 27 மற்றும் 42 வயதுடைய நிட்டம்புவ, முல்லேரியா, கிந்தோட்டை மற்றும் எல்லக்கல பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

கைதான சந்தேக நபர்களை நேற்று (9) அத்தனகல்ல நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் ஏதேனும் குற்றச் செயல்களுக்காக பயணித்தார்களா என்பது குறித்தும் நிட்டம்புவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





**Project Co-ordinator**

Institution: IOM – UN Migration
*Email: https://srilanka.iom.int/careers*

**Sales Officers**

Company: Global Vinyl PVT Ltd
Email: careers@globalvinyl.lk

**Administrator**

School: Zahira College, Colombo
*Web: www.zahiracollege.lk*

**Post of Peon**

Institution: High Commission of India, Colombo
*Email: admn2.colombo@mea.gov.in*

**Deputy Executive Director**

Institution: FPA Sri Lanka
*Email: careers@fpasrilanka.org*

**Field Officer**

Location: Kaluthara
*Email: careers@lankacanneries.com*

**Graphic Designer**

Company: Seren Scents PVT Ltd
Age Limit: 20-30 Years
*Email: saleslk@serenscents.co.uk*

**Content Writer**

Company: The CEO Sri Lanka
*Email: hello@ceo.lk*

**Content Writer / Communication Officer**

Company: Ecpat, Colombo
Email: ecpatlk@gmail.com

**Programme Co-ordinator**

Institution: IUCN Sri Lanka
*Web: www.iucn.org*

**Cost Controller**

Company: Sugar, Colombo
*Email: hr@sugarcolombo.com*

**Senior Accountant**

Company: Genesiis Software PVT Ltd.
*Email: hr@genesiis.com*

**Receptionist**

Institution: Ceylon Steel Corporation Ltd
*Email: vacancies@ceylonsteel.com*


# எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கையடக்கத் தொலைபேசி திருட்டு

## முன்னாள் ஊழியர் கைது

(கெலும் குணதிலக்க மொனராகல)



படல்கும்புர நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து கையடக்கத் தொலைபேசியை திருடிய அந்த எரிபொருள் நிரப்பு நிலைய முன்னாள் ஊழியர் ஒருவரை படல்கும்புர பொலிஸார் நேற்று முன்தினம் (08) கைதுசெய்துள்ளனர்.

எரிபொருள் நிரப்பும் நிலைய ஊழியர் ஒருவர் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசியை சார்ஜ் செய்வதற்கு மேல் மாடியில் வைத்துவிட்டுச் சென்று பார்த்தபோது தொலைபேசி காணப்படவில்லை.

விசாரணையின்போது எரிபொருள் நிரப்பு நிலையத்தின் முன்னாள் ஊழியர் ஒருவர் வந்துசென்றமை தெரியவந்துள்ளது.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் திருடப்பட்ட கைத்தொலைபேசி மீட்கப்பட்டதுடன், அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை மொனராகலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

# 7 இலட்சம் பெறுமதியான தங்கச் சங்கிலி கொள்ளை

(கெலும் குணதிலக்க)

வெல்லவாய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வதினஹெலயாய பிரதேசத்தில் நேற்று முன்தினம் (08) மாலை வர்த்தகர் ஒருவரின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலி திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் வெல்லவாய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தத் தொழிலதிபர் தனது வணிக இடத்திலிருந்து வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தபோது, கார் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக வழியில் நின்றது.

பின்னர், பலரின் உதவியுடன் காரை சரிசெய்துவிட்டு, அங்கிருந்து புறப்படும்போது, அருகில் வந்த மூன்று இளைஞர்கள் அவரது தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

பதக்கத்துடன் இருந்த குறித்த தங்கச் சங்கிலியின் மதிப்பு சுமார் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா என தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# 2023 குளிர்கால ஒலிம்பிக்கை நடத்த சுவீடன் ஆர்வம்




2030 குளிர்கால ஒலிம்பிக், பாராலிம்பிக் விளையாட்டுகளை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகளை பகுப்பாய்வு செய்ய "ஒரு ஆரம்ப ஆய்வை" சுவீடிஷ் ஒலிம்பிக் கமிட்டி தொடங்கியுள்ளது.

"சுவீடனின் சூழலின் அடிப்படையில் ஒலிம்பிக்கை எவ்வாறு வடிவமைக்க முடியும் என்பதை ஆரம்ப ஆய்வு காட்டுகிறது" என்று எஸ்ஓசியின் செயல் தலைவர் ஆண்டர்ஸ் லார்சன் கூறினார்.

மிகப்பெரிய குளிர்கால விளையாட்டுகளை நடத்துவதற்குத் தேவையான அனைத்து அரங்குகளும் ஏற்கனவே இங்கு உள்ளன. கடந்த மாதம் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியுடனான கூட்டத்திற்குப் பிறகு நோர்டிக் நாடு பந்தயத்தில் நுழைந்தது. முதல் கட்டமாக, 2030இல் எதிர்கால குளிர்கால விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து, ஐஓசியுடன் ஒரு சந்திப்பை நடைபெற்றது.

"2026ஆம் ஆண்டு குளிர்கால விளையாட்டுப் போட்டியை நடத்த சுவீடன் முயற்சித்தது. இத்தாலி அந்த வாய்ப்பைத் தட்டிப் பறித்தது. வலுவான குளிர்கால விளையாட்டு நாடாக இருந்தபோதிலும், சுவீடன் குளிர்கால ஒலிம்பிக்கை ஒருபோதும் நடத்தவில்லை மற்றும் எட்டு முறை முந்தைய சந்தர்ப் பங்களில் ஏலத்தில் வெற்றிபெறத் தவறிவிட்டது. இருப்பினும் 1912இல் கோடைகால விளையாட்டுகளை அரங்கேற்றியது.

ஜப்பானிலுள்ள சப்போரோ, அமெரிக்காவிலுள்ள சால்ட் லேக் சிட்டி, கனடாவிலுள்ள வான்கூவர் ஆகியவை ஏழு ஆண்டுகளில் குளிர்கால விளையாட்டுகளை நடத்துவதற்கான விருப்பங்களை ஆராய்ந்து வருகின்றன.

# ஆஸி. அணி இந்தியாவை வீழ்த்தி இலங்கைக்கு உதவும் என்கிறார் மஹேல




1 10 - 1 12

ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டிக்கு இலங்கை அணி தகுதி பெற, அவுஸ்திரேலிய அணி உதவி செய்யும் எனவும், இந்தியா – அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ள போர்டர் கவாஸ்கர் டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலிய அணி வெற்றி பெறும் எனவும் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இந்திய - ஆஸி. அணிகளுக்கிடையிலான 4 டெஸ்ட் போட்டிகள்கொண்ட தொடரின் முதல் போட்டி நேற்று நாக்பூர் மைதானத்தில் ஆரம்பமானது. இந்த டெஸ்ட் தொடரானது ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெறும் அணிகள் எது என்பதை தீர்மானிக்கும் முக்கிய தொடராகவும் அமைந்திருக்கிறது.

இந்நிலையில், இலங்கை அணி இம்முறை ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டிக்கான தகுதியைப் பெறுவதற்கான வாய்ப்பு கிடைத்திருப்பது மற்றும் இலங்கை அணியின் இதுவரையான பயணம் மிகவும் ஊக்கமளிப்பதாக மஹேல ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பின் ஆரம்பத்தில் இலங்கை அணி உலக டெஸ்ட் அணிகளின் தரவரிசையில் ஏழாவது அல்லது எட்டாவது இடத்தில் இருந்தது என்று நான் நினைக்கிறேன். இந்த 2 ஆண்டுகள் காலப்பகுதியில் இலங்கை அணி வீரர்கள் சில அற்புதமான கிரிக்கெட்டையும், நிலையான கிரிக்கெட்டையும் விளையாடியுள்ளனர், இதன்காரணமாகவே இம்முறை உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டியில் விளையாடுவதற்கு வாய்ப்புக்கான போட்டியில் இலங்கை அணியும் உள்ளது - என்றார்.

# சாதித்த உதைபந்து வீரர்களுக்கு கௌரவிப்பு



(இக்பால் அலி)

மாத்தளை உதைபந்து விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் 2022ஆம் ஆண்டுக்கான மாத்தளை மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையிலான உதைபந்து சுற்றுப்போட்டியில் 16 வயதுக்குக் கீழ் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட அஜ்மீர் உதைபந்து குழுவினரையும் மற்றும் 14 வயதுக்குக் கீழ் பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட குழுவினரையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் கேட்போர் கூடத்தில் பாடசாலையின் பிரதி அதிபர் டி. அப்துல் சலாம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அஜ்மீர் சர்வதேச பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் இயங்கும் உக்குவளை அஜ்மீர் உதை பந்தாட்ட சங்கத்தின் முகாமையாளர் எம்.டபிள்யூ.எம்.ஜுமான் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதுடன், பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாட்டுக் குழுத் தலைவர் எஸ்.ஏச்.எம்.ஆஷீக், பயிற்றுவிப்பாளர் ஜே.எம்.நியாட், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு செயலாளர் என்.எம். நஸார் உள்ளிட்ட இன்னும் பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

# டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப்போட்டி ஜூன் 7இல் ஆரம்பம்

இரண்டாவது ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டி இங்கிலாந்திலுள்ள ஓவல் மைதானத்தில் ஜூன் 7 முதல் 11 வரை நடைபெறும் என சர்வதேச கிரிக்கெட் பேரவை அறிவித்துள்ளது. மேலும் இறுதிப் போட்டிக்கு மேலதிக நாளாக அடுத்த நாள் 12ஆம் திகதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தியா – ஆஸி, இலங்கை – நியூசிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா – மேற்கிந்திய தீவுகள் ஆகிய அணிகளுக்கிடையில் இன்னும் 3 டெஸ்ட் தொடர்கள் மாத்திரம் எஞ்சியுள்ளன. இந்த ஆண்டுக்கான இறுதிப் போட்டியில் மோதும் அணிகள் இதுவரை உறுதிசெய்யப்படாத நிலையில், அவுஸ்திரேலியா, இந்தியா, இலங்கை, தென்னாபிரிக்கா ஆகிய நான்கு அணிகள் இடையே கடும் போட்டி நிலவி வருகின்றது.

# ஒலுவில் பவர் ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியன்

(றியாஸ் இஸ்மாயில்)



அட்டாளைச்சேனை நியூஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஒலுவில் பவர் ஸ்டார் விளையாட்டுக் கழகம் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது.

நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஏ.எச்.அஸ்லம் தலைமையில் சின்னப்பாலமுனை ஹிக்மா விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் நியூஸ்டார் விளையாட்டுக் கழகத்துடன் மோதி பவர் ஸ்டார் விளையாட்டுக் கழகம் வெற்றிகொண்டு 10 ஆயிரம் ரூபா பணப்பரிசுடன் வெற்றிக் கிண்ணத்தையும் சுவீகரித்தது.

இந்நிகழ்வில் சமூக சேவகர் தொழிலதிபர் எம்.ஏ.அபூபக்கர், பிரதேச சபை உறுப்பினர் ரீ.ஆப்தீன், வை.எம்.எம்.ஏ. மாவட்ட பணிப்பாளர் முகம்மட் றியாஸ், அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ. தலைவர் எம்.ஐ. ஹாசீம் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# மானியக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு



(மூதூர் செய்தியாளர்)

தென்னைப் பயிர்ச்செய்கை சபையினால் தென்னைப் பயிர்ச்செய்கையாளர்களுக்கான 2022ஆம் ஆண்டுக்கான பசளை மானியக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு மூதூர் பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் நேற்று வியாழக்கிழமை (09) காலை இடம்பெற்றது.

மூதூர் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஆர்.எம்.சிபான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மூதூர், சம்பூர், கட்டைப்பறிச்சான், தோப்பூர் பகுதிகளைச் சேர்ந்த 65 தென்னைப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு இதன்போது பசளை மானியக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி, தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு கருத்தரங்கு



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்துடன் இணைந்து கிழக்கிலங்கை மனிதவள, பொருளாதார அபிவிருத்தி நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான தலைமைத்துவம் மற்றும் போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு தொடர்பான கருத்தரங்கு மண்முனைப்பற்று சர்வமத ஒன்றியத்தின் அனுசரணையில் ஆரையம்பதி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் புதன்கிழமை (08) இடம்பெற்றது.

இதன் முதற்கட்ட மாணவர்களுக்கான கருத்தரங்கில் மட்டக்களப்பு கல்வி வலயத்தின் மண்முனை வடக்கு ஆரையம்பதி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஆரையம்பதி, காங்கேயனோடை மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேசங்களில் அமைந்துள்ள 11 பாடசாலைகளில் கல்வி பயிலும், தெரிவுசெய்யப்பட்ட 45 மாணவர்கள் பங்குபற்றினார்கள்.

இவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி அளிக்கப்பட்டு, போதைப்பொருள் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வும் வழங்கப்பட்டது. இக்கருத்தரங்கின் வளவாளராக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் சிரேஷ்ட உளநல வைத்தியர் யு.டி.ரமேஷ் ஜெயக்குமார் செயற்பட்டதுடன், பிரதேச போதைப்பொருள் தடுப்பு உத்தியோகத்தர் எஸ்.கணேசதாசன் நிகழ்வை ஒருங்கிணைப்பு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இரண்டு வாக்காளர்களுக்கு ஒரு வாக்கெடுப்பு நிலையம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட மண்முனை வடக்கு பிரதேச செயலக நிர்வாக எல்லைக்குட்பட்ட மாந்தீவு தொழுநோய் வைத்தியசாலையில் தொடர்ச்சியாக சிகிச்சைபெற்று வரும் இருவருக்கான வாக்கெடுப்பு நிலையம் அமைப்பதற்காக சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலகருமான திருமதி கலாமதி பத்மராஜா தெரிவித்தார்.

மாந்தீவானது நாலாபக்கமும் நீரினால் சூழப்பட்டிருக்கும் இடம் என்பதனால் வாக்கெடுப்பு நிலையத்திற்கான விசேட போக்குவரத்திற்காக இயந்திரப்படகு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கான சிரேஷ்ட தலைமை அதிகாரி மற்றும் கனிஷ்ட தலைமை அதிகாரி, முகாமைத்துவ உதவியாளர், பொலிஸ் என ஆளணியினர் நியமிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பொதுவான வாக்கெடுப்பு நிலையத்தில் பின்பற்றப்படும் சகல நடைமுறைகளும் இங்கு பின்பற்றப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கது. வாக்கெடுப்பு நிறைவடைந்ததும் வாக்கு எண்ணும் நிலையமான புதூர் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் வாக்கு எண்ணல் நடைபெறவுள்ளதாக உதவித் தேர்தல் ஆணையாளர் எம்.பி.எம்.சுபியான் தெரிவித்தார்.

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கோணாவத்தை செய்தியாளர்)

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பட்ட இரகசியத் தகவலின்படி பொலிஸ் பரிசோதகர் பகிதரன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்திற்கு சென்று நபர் ஒருவரை கைதுசெய்துள்ளதுடன், அவரிடமிருந்து 35 மில்லிகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் வியாழக்கிழமை (09)ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



கடந்தாண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை மாணவி ஏ.எம்.பாத்திமா யம்ஹா 162 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளதாக பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.இல்யாஸ் தெரிவித்தார். இவர் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் கலாநிதி ஏ.எல்.எம்.ஐயூப்கான் தம்பதியினரின் புதல்வியாவார். (பொலிவேரியன் செய்தியாளர்)

# கூட்டுறவுச் சங்க வளவாளர் நியமனம்



(வெல்லாவெளி செய்தியாளர்)

அம்பாறை மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க சமாசத்தின் வழிகாட்டி வளவாளராக கலாநிதி வை.ஜெயமுருகன் வியாழக்கிழமை (09) நியமிக்கப்பட்டார். தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில் பணிப்பாளர் சபை கூடி இதற்கான தீர்மானத்தை எடுத்து சம்பிரதாயபூர்வமாக அறிவித்தது.

கலாநிதி ஜெயமுருகன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். கூட்டுறவுத் துறை நிபுணரான இவர், ஜப்பான், பிலிப்பைன்ஸ் அடங்கலான உலக நாடுகள் பலவற்றிலும் உயர் நிலை பதவிகள் வகித்தவர். அத்துடன், நெதர்லாந்து மனிதநேய கூட்டுறவுச் சங்கத்தின் உயிர்நாடிகளில் ஒருவராக செயற்பட்டு தாயகத்தில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஓர் ஊக்கியாக இயங்குகின்றார்.







ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மாஞ்சோலை கிராமத்தில் சிகிச்சை நிலையத்திற்கான கட்டிட திறப்பு விழா நேற்று வியாழக்கிழமை(09) இடம்பெற்றது. வைத்தியர் எம்.எச்.எம்.தாரிக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளீதரன் கலந்து கொண்டிருந்தார். (கல்குடா செய்தியாளர்)

# கிழக்கு மாகாண பட்டதாரிகளுக்கு வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பை வழங்குங்கள்

## கல்வியமைச்சரிடம் இம்ரான் எம்.பி. கோரிக்கை



(கந்தளாய், கிண்ணியா செய்தியாளர்கள்)

தற்போது விண்ணப்பம் கோரப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர் நியமனத்தில் கிழக்கு மாகாண பட்டதாரிகளும் வழிகாட்டல் ஆலோசனை (Guide and Counseling) ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பை வழங்குங்கள் - என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் 200க்கும் மேல் வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. எனினும், தற்போது பட்டதாரிகளிடமிருந்து கோரப்பட்டுள்ள ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பத்தில் கிழக்கு மாகாண பட்டதாரிகள் வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர் பதவியை தெரிவுசெய்ய முடியாத நிலை இணையத்தளத்தில் காணப்படுகின்றது.

இதனால் பல பட்டதாரிகள் பாதிக்கப்படுவதோடு, கிழக்கு மாகாணத்திலுள்ள வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர் பற்றாக்குறையையும் நிவர்த்திக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே கிழக்கு மாகாண பட்டதாரிகளும் வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பை ஏற்படுத்துமாறு இக்கோரிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

# தனிமையில் வசித்து வந்த 52 வயதான பெண் உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்பு!

## வாழைச்சேனையில் சம்பவம்







(வாழைச்சேனை நிருபர்)

கல்குடா வீதி வாழைச்சேனையிலுள்ள வீடொன்றில் தனிமையில் வசித்து வந்த பெண் ஒருவர் உருக்குலைந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை (09) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை பொலிஸாருக்கு உறவினர்கள் வழங்கிய தகவலின்படி குறித்த பெண் சடலமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் கல்குடா வீதி வாழைச்சேனையைச் சேர்ந்த திருமதி பாஸ்கரன் சற்குணதேவி (வயது 52) என்ற 4 பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 15 நாட்களாக தமது சகோதரியின் தொலைபேசி அழைப்பு துண்டித்து காணப்படுவதாகவும் அவர் தொடர்பான தகவல்கள் எதுவும் தெரியவில்லையெனவும் அவரைத் தேடிப் பார்க்கும்படி வவுனியாவில் உள்ள சகோதரி ஒருவர் வாழைச்சேனைப் பிரதேசத்தில் வசிக்கும் தமது உறவினர் ஒருவருக்கு தகவல் வழங்கியுள்ளார். அவர் நேற்றுக் காலை பிரதேச கிராமசேவகருக்கு தகவல் வழங்கியதையடுத்து, பொலிஸாரின் உதவியுடன் அவர் வசித்த வீட்டுக்குச் சென்று பார்த்தபோது உயிரிழந்த நிலையில் சடலத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட குறித்த பெண், கடந்த 10 வருடங்களாக மலேஷியாவில் தொழில் புரிந்து வந்த நிலையில், கடந்த 2 மாதங்களுக்கு முன்னர் வாழைச்சேனையிலுள்ள தமது வீட்டில் வசித்து வந்துள்ளார். தான் வசித்து வந்த வீட்டை விற்பனை செய்துவிட்டு வவுனியா திரும்பும் நிலையில் வீட்டை விற்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நிலையில், இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளமை உறவினர்கள் மத்தியில் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளதாக அவரது சகோதரி தெரிவித்தார்.

குறித்த பெண்ணின் கணவர் யாழ்ப்பாண பிரதேசத்தில் பொலிஸ் உத்தியோகத்தராக கடமையாற்றி வருகின்றார் என்றும் இருவரும் தற்போது பிரிந்து வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கடமைக்கு இடையூறு விளைவித்த மூவர் கைது: ஒருவர் தலைமறைவு!

(அப்துல்சலாம் யாசீம்)

ஹொரவப்பொத்தானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யான்ஓயா பகுதியில் முறைப்பாடு ஒன்றினை விசாரிக்கச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கியதுடன், கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை (09) காலை 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

யான் ஓயா எனும் கிராமத்தில் இருவருக்கிடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக ஒருவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்து குறித்த முறைப்பாட்டை விசாரணை செய்யச் சென்ற பொலிஸாரை தாக்கியதுடன், பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் மூன்று பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், மற்றுமொருவர் தலைமறைவாகியுள்ளார். கைது செய்யப்பட்டவர்கள் ஹொரவப்பொத்தானை, யான் ஓயா பகுதியைச் சேர்ந்த 23, 27 மற்றும் 28 வயதுடையவர்களாவர்.

இதேவேளை, தலைமறைவாகிய சந்தேக நபரை கைதுசெய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்களை கெப்பித்திக்கொள்ளாவ நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இதுதொடர்பிலான மேலதிக விசாரணைகளை ஹொரவப்பொத்தானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் த.தே.கூ. எம்.பிக்கள் சந்திப்பு




(மட்டக்களப்பு செய்தியாளர்)

இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன் – பிரான்கோயிஸ் பேக்டெட் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று புதன்கிழமை(08) இடம்பெற்றுள்ளது. இதன்போது இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற குறித்த சந்திப்பில், இலங்கைக்கான பிரான்ஸின் துணைத் தூதுவரும் பங்கேற்றிருந்தார்.

இதன்போது தமிழ் மக்களின் அரசியல் தீர்வு, சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டிருந்த போராட்டம் ஆகியன தொடர்பில் பேசப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் காலங்களில் பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கும் உதவிகளை எவ்வாறு தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கு உதவும் வகையில் வழங்க முடியும் என்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ சுமந்திரன், இரா.சாணக்கியன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

# மின்வேலியில் சிக்குண்டு உயிரிழந்த யானையை புதைத்த சந்தேக நபர் கைது



(அப்துல்சலாம் யாசீம்)


திருகோணமலை, கப்பல்துறை பகுதியில் வயல் உரிமையாளர் ஒருவர் தனது வயல் பகுதியை பாதுகாக்கும் நோக்கில் அமைக்கப்பட்டிருந்த மின்வேலியில் சிக்குண்டு உயிரிழந்த யானையை புதைத்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரை சீனக்குடா பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

திருகோணமலை, முத்துநகர் பகுதியைச் சேர்ந்த சமீன் மொஹமட் மைவூத் எனும் 56 வயதான நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், குறித்த பகுதியில் கொம்பன் யானையொன்று உயிரிழந்துள்ளதாக நேற்று (09) வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைக்கப்பட்ட தகவலின்படி விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் மேற்படி நபரை கைதுசெய்துள்ளனர்.

இதனையடுத்து, குறித்த சம்பவ இடத்திற்கு விஜயம் செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் இது தொடர்பில் சீனக்குடா பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்துள்ளதாகவும் யானை உயிரிழப்பு தொடர்பில் விசாரணைகளை வனஜீவராசிகள் திணைக்களம் மேற்கொண்டு வருவதாகவும் வட்டாரப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

## போடியார் புலம்பல்!



**பசப்பு வார்த்தைகளுக்கு மக்கள் ஏமாறப்போடாதாம் எண்டு பட்டிருப்பு தொகுதி ரெலிபோன் கட்சி அமைப்பாளர் சோ.கணேசமூர்த்தி சொல்லியிருக்காரு எலுவா? அடே தம்பி நீ இப்ப சஜித் பிரேமதாசவுட்ட பணத்தப்பெற்று ரெலிபோனோட வாறா, போன 2020 எலக்சனில விக்கினேஸ்வரன் கட்சில மீனோட ஒண்ட மகன் கோபியையும் கூட்டித்து வாறா, 2018, தேர்தலில ரணிலிட யானையோட வாறா அதற்குமுந்தி சந்திரிகாட கதிர, மகிந்தட வெத்தில, சிறிமாட கை, இப்படியான ரோசம்கெட்ட நீ மற்றவனுக்கு மசப்பு வார்த்தையில புத்தி சொல்ல வெக்கம் இல்லையாடா ஒணக்கு..!**





அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தினால் மக்களை நோக்கி (காலடியில்) என்ற தொனிப்பொருளில் நடமாடும் சேவை பின்தங்கிய கிராமமான ஆலங்குளத்தில் செவ்வாய்க்கிழமை (07) பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமது ஷாபிர் தலைமையில் இடம்பெற்றது. இந்த நடமாடும் சேவை பிறப்பு, இறப்புச் சான்றிதழ் வழங்குதல் மற்றும் சமுர்த்தி பிரச்சினைக்கான தீர்வு, சமூக சேவை ஊடாக முதியோருக்கான கொடுப்பனவு, காணிப் பிரச்சினைகள் போன்றவைக்கான தீர்வுகள் என்பன இடம்பெற்றன. இதில் பிரதேச செயலக அதிகாரிகளும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

(திராய்க்கேணி செய்தியாளர்)

# 1880 மில்லிகிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று தம்பட்டை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின்படி, குறித்த பிரதேசத்திற்கு சென்ற விசேட அதிரடிப்படையினர் சந்தேக நபரை கைதுசெய்துள்ளதுடன் அவரிடமிருந்த 1880 மில்லி கிராம் கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் புதன்கிழமை (08) ஆஜர்படுத்திய போது எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நஞ்சற்ற மரக்கறி விற்பனை நிலையம் திறந்துவைப்பு



(மண்முனை செய்தியாளர்)

மட்டக்களப்பு ஆயித்தியமலை அன்னை இளைஞர் கழகத்தினால் நஞ்சற்ற மரக்கறி உற்பத்தியும் விற்பனை சந்தையும் மண்முனை மேற்கு பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் புதன்கிழமை (08) பிற்பகல் வவுணதீவில் திறந்து வைக்கப்பட்டது.

பிரதேச செயலகம், ஏ.யூ.லங்கா போன்றவற்றின் கண்காணிப்பில் ஆயித்தியமலை பிரதேச இளைஞர்களின் கூட்டு முயற்சியால் உற்பத்திசெய்யப்பட்ட உள்ளூர் மரக்கறி வகைகள், முட்டை உள்ளிட்ட பல உற்பத்திப் பொருட்கள் இச்சந்தையில் விற்பனை செய்யப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர், உதவிப் பிரதேச செயலாளர் சுபா சதாகரன், ஏ.யூ.லங்கா நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி ராஜன் தவசீலன், முகாமையாளர் கஜன், திட்ட இணைப்பாளர் அனுலா, இளைஞர் சேவைகள் உதவிப் பணிப்பாளர் கலாராணி, இளைஞர் சேவைகள் அதிகாரி சசீந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சைல்ட் பண்ட் (Child fund) மற்றும் ஏ.யூ.லங்கா நிறுவனத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் இத்திட்டம், ஆயித்தியமலை அன்னை இளைஞர் கழகத்தினால் வாராந்த சந்தையாக வவுணதீவு பிரதேச செயலகத்தின் அருகில் நிரந்தரமாக அமைந்துள்ளது.

# முன்பள்ளி சிறார்களுக்கு காலை உணவுத்திட்டம்



(மட்டக்களப்பு, கல்லடி செய்தியாளர்)

யுனிசெப் நிறுவனத்தின் நிதி உதவியின் கீழ் முன்பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கல் தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் புதன்கிழமை (08) இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 209 முன்பள்ளி பாடசாலைகளின் சிறார்களுக்கு போசாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்காக யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையில் காலை உணவு வழங்கப்பட்டு வருகின்றது. இதன்போது முன்பள்ளி சிறார்களுக்கு உணவு வழங்கலின்போது ஏற்படும் சவால்கள் மற்றும் உணவின் தரம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ஜே.கணேசமூர்த்தி, யுனிசெப் நிறுவனத்தின் கல்வி அதிகாரி சசிகலா, பிரதம வெளிக்கள உத்தியோகத்தர் நிபாள் அலாவுதீன், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், துறைசார் நிபுணர்கள் மற்றும் உயரதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




கல்வி அமைச்சினால் அனுப்பப்பட்ட ஆசிரிய ஆலோசகர் சேவை நியமனக் கடிதத்தை கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான எஸ்.சிராஜுதீனிடம் ஒப்படைக்கப்படுவதையும் தெரிவு செய்யப்பட்ட ஏனைய ஆசிரிய ஆலோசகர்களையும் படத்தில் காணலாம்.

# துருக்கி - சிரிய நிலநடுக்கம் இந்நூற்றாண்டின் பேரழிவு

## 18 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலி





## • இடிபாடுகளிடையே வீசும் துர்நாற்றம்
## • உயிரிழப்புகள் அதிகரிக்கக்கூடும் என அச்சம்

துருக்கி மற்றும் சிரியாவில் நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 18 ஆயிரத்தைக் கடந்துள்ள நிலையில், மீட்புப் பணியின்போது இடிபாடுகளுக்கு நடுவே துர்நாற்றம் வீசுவதால் மேலும் பலர் உயிரிழந்திருக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

மீட்புப் பணிகள் தொடரும் நிலையில், துருக்கியில் கட்டட இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. துருக்கியில் இந்த நூற்றாண்டில் ஏற்பட்ட மிக மோசமான நிலநடுக்கமாக இது பார்க்கப்படுகிறது. துருக்கி மட்டுமன்றி சிரியாவிலும் இந்த நிலநடுக்கம் மிக மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.



நிலநடுக்கத்தால் உலுக்குலைந்துள்ள துருக்கி மற்றும் சிரியா ஆகிய நாடுகளுக்கு 70இற்கும் மேற்பட்ட நாடுகள் உதவிக்கரம் நீட்டியுள்ள நிலையில், கடந்த நான்கு நாட்களாக இரவு பகலாக மேற்கொள்ளப்பட்ட மீட்புப் பணிகளில் உயிருடன் பலர் மீட்கப்பட்டுள்ளனர். மீட்புப் பணிகள் குறித்து வெளியாகும் புகைப்படங்கள் மற்றும் காணொளி காட்சிகள் கண் கலங்க வைக்கின்றன. இன்று ஐந்தாவது நாளாகவும் மீட்புப் பணிகள் தொடர்கின்றன.

துருக்கியின் தென் கிழக்குப் பகுதியிலுள்ள நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள 10 மாகாணங்களில் 3 மாத காலத்துக்கு அவசர நிலையை அந்நாட்டு ஜனாதிபதி எர்டோகன் அறிவித்துள்ளார்.

கட்டட இடிபாடுகளிலிருந்து இறந்தவர்களின் உடல்கள் தொடர்ந்து மீட்கப்பட்டு வருகின்றன. இதனால் உயிரிழப்பு எண்ணிக்கை 20,000ஆக அதிகரிக்கலாம் என்றும் 2 கோடியே 30 இலட்சம் பேர் பாதிக்கப்படலாம் என்றும் தெரிவித்துள்ள உலக சுகாதார நிறுவனம், உலக நாடுகள் துருக்கிக்கு விரைந்து உதவ வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது.

துருக்கியில் நிலவும் கடும் பனிப்பொழிவு மீட்புப் பணிகளுக்குத் தடையாகவுள்ளது. அதேபோன்று, நிலநடுக்கத்திற்கு முன்பிருந்தே, உறைய வைக்கும் குளிர், கொலரா நோய் பரவல், மோசமான உட்கட்டமைப்பு ஆகியவற்றால் சிரிய அகதிகள் பாதிக்கப்பட்டனர். தற்போது, நிலநடுக்கம் ஏற்பட்ட வடக்கு சிரியாவில் உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட இலட்சக்கணக்கான சிரிய அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளனர். இந்த நிலநடுக்கத்தால் இந்த அகதிகள் வெகுவாக பாதிக்கப்பட்டனர்.

மேலும் 12 ஆண்டுகால உள்நாட்டு யுத்தத்தால் சிதைவடைந்துள்ள சிரியாவை இந்த நிலநடுக்கம் மேலும் உருக்குலைய வைத்துள்ளது. கிளர்ச்சியாளர்களின் வசமுள்ள சிரியாவின் பல பகுதிகளுக்கு இன்னமும் நிவாரணப் பணிகள் சென்றடையவில்லை என தெரிவிக்கப்படுகிறது. இதனால் அங்கு நிலைமை மேலும் மோசமாகலாமென தெரிவிக்கப்படுகிறது.

சிரியாவின் எல்லையை ஒட்டிய துருக்கியின் தென்கிழக்குப் பிராந்தியத்தில் கடந்த திங்கட்கிழமை (06) அதிகாலை (உள்ளூர் நேரப்படி) 4.17 மணியளவில் 7.8 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த சக்திவாய்ந்த நிலநடுக்கம் உணரப்பட்ட நிலையில், பீதியடைந்த மக்கள் வீதிகளில் தஞ்சமடைந்தனர். அதிகாலை நேரம் என்பதால் ஆழ்ந்த நித்திரையிலிருந்தோர் தன்னிலை அறிவதற்குள் கட்டட இடிபாடுகளில் சிக்கிக்கொண்டனர். இந்நிலநடுக்கம் சுமார் 10 நிமிடங்கள் நீடித்த நிலையில் 6.7 ரிச்டர் அளவில் மற்றுமொரு அதிர்வு உணரப்பட்டது.

இந்நிலநடுக்கத்தால் அடுக்குமாடிக் குடியிருப்புகள், வணிக வளாகங்கள், மருத்துவமனைகள் உள்ளிட்ட கட்டடங்கள் சீட்டுக்கட்டுகளைப்போல் சரிந்து வீழ்ந்தன.

இதனையடுத்து உள்நாட்டு மீட்புப் படைகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தவேளை மதியம் 1.45 மணியளவில் 7.6 ரிச்டர் அளவில் மீண்டுமொரு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

முதல் நிலநடுக்கத்தில் ஆட்டங்கண்ட பல கட்டடங்கள் இந்நிலநடுக்கத்தில் நிர்மூலமாகின. நிலநடுக்கத்தைத் தொடர்ந்து 200இற்கும் மேற்பட்ட பின்அதிர்வுகள் பதிவாகின. இதனையடுத்து சேதமடைந்த கட்டடங்களுக்குள் பொதுமக்கள் நுழைய வேண்டாம் என வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலநடுக்கத்தால் துருக்கியிள் கஹ்ரமன்மராஸ் (Kahramanmaras), காஸியண்டெப் (Gaziantep), சன்லியுர்ஃபா (Sanliurfa), தியர்பாகிர் Diyarbakir, அடனா (Adana), அடியமன் (Adiyaman), மாலட்யா (Malatya), உஸ்மானியே (Osmaniye), ஹடய் Hatay மற்றும் கிலிஸ்(Kilis) உள்ளிட்ட 10 மாகாணங்கள் பெரும் அழிவை சந்தித்துள்ளன.

இதேபோன்று சிரியாவின்(அலெப்போ Aleppo), இட்லிப் (Idlib), ஹமா (Hama) மற்றும் லடாகியா (Latakia) ஆகிய மாகாணங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

தெற்கு துருக்கியில் அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற்பட்டு இன்று 5 நாட்களாகியும் இன்னும் சில பகுதிகளுக்கு நிவாரணப் பணிகள் சென்றடையவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. சுமார் 5,00,000 சிரிய அகதிகள் வசிக்கும் துருக்கியின் ஹடாய் மாகாணம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மாகாணத் தலைநகரான அன்டாக்யாவுக்கு அருகிலுள்ள வீதிகள் மற்றும் சிவில் விமான நிலையம் உள்ளிட்டவை கடும் சேதத்துக்குள்ளாகியுள்ளன. இதனால் அங்கு மீட்புப் பணிகள் சென்றடைவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.



சிரியாவில் நிலநடுக்கத்தால் உயிரிழந்தோர் ஒரே இடத்தில் அடக்கம் செய்யப்பட்டபோது....

இந்நிலையில், துருக்கி மற்றும் சிரியாவில் பெரும் சேதத்தையும் சோகத்தையும் ஏற்படுத்திய நிலநடுக்கத்தால் இதுவரை (பத்திரிகை அச்சுக்குச் செல்லும் வரை) 17 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. துருக்கியில 15,000இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன், 63,000இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். இதேவேளை, சிரியாவில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

நிலநடுக்கத்தால் வீடுகளை இழந்தோர், அரச அலுவலகங்கள், வழிபாட்டுத் தலங்களில் தஞ்சமடைந்துள்ளனர். இடிந்துவீழ்ந்த கட்டட குவியல்களாக காட்சியளிக்கின்றன. அதற்குள் சிக்கியவர்களை தேடும் பணி தொடர்ந்து நீடித்து வருகிறது.

சர்வதேச நாடுகளின் உதவியுடன் மீட்புப் பணிகள் இரவு பகலாக நடந்து வருகின்றன. இடிபாடுகளின் நடுவே துர்நாற்றம் வீசுவதாக மீட்புப் பணி வீரர்கள் கூறுவதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதிகளில் மைனஸ் 3 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை நிலவுவதால், கடும் குளிரை சமாளிக்க வீதிகளில் நெருப்பை மூட்டி குளிர் காய்கின்றனர். நிலநடுக்கம் காரணமாக வீதிகள் வெடித்தும் பிளந்தும் காணப்படுவதால் போக்குவரத்து சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. மின்சாரம் இல்லாததால் தொலைத்தொடர்பு வசதிகள் துண்டிக்கப்பட்டுள்ளன. இதனால் சில பகுதிகளில் மீட்புப் பணிகள் மேற்கொள்ள முடியாத நிலை உள்ளதுடன், கடும் குளிர் மற்றும் பனிப்பொழிவால் மீட்புப் பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது.

மேலும் நிலநடுக்கத்தால் நிலைகுலைந்துபோயுள்ள ஹடய் (Hatay) நகரத்தின் இடிபாடுகளிலிருந்து கொசாவா நாட்டு மீட்புப் படையினர் 2 வயது குழந்தையை உயிருடன் மீட்டனர்.

ஹடய் நகரத்தின் முக்கியமான இணைப்பு வீதிகள் முழுவதும் சேதமடைந்துள்ளன. சில இடங்களில் வெடித்தும், பல இடங்களில் இரண்டாகப் பிளந்தும் வீதிகள் காணப்படுகின்றன.

துருக்கியின் அடியமன் நகரில் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த பாகிஸ்தானைச் சேர்ந்த வீரர்கள் இடிபாடுகளில் சிக்கியிருந்த சிறுவனை உயிருடன் மீட்டபோது, அருகில் இருந்தவர்கள் இறைவன் மிகப் பெரியவன் என முழக்கமிட்டனர்.

நிலநடுக்கத்தினால் முற்றிலும் சிதைந்துபோன சிரியாவின் அலெப்போ நகரில் இடிபாடுகளுக்கு இடையே மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த வீரர்கள் உயிரிழந்தவர்களின் உடல்களை எடுத்துச் சென்றனர்.

துருக்கி, சிரிய எல்லை நகரமான க்ளைவ்கோஸூவில் நகரில் ஏராளமான சடலங்கள் ஆங்காங்கு நிறுத்திவைக்கப்பட்டுள்ள ட்ரக்குகளிலும், வாகனங்களிலும் வரிசை வரிசையாக ஏற்றப்படுகின்றன.

ஹராஸ்தா நகரில் இடிந்து விழுந்த கட்டடங்களுக்கு நடுவே யாரேனும் பிழைத்துள்ளனரா என மீட்புப் பணி வீரர்கள் இரவு நேரங்களிலும் தேடுதல் வேட்டை நடத்தினர்.

இந்நிலையில், நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்டுள்ள சிரியாவின் அலெப்போ நகரில் உயிரிழந்தோரை பாரிய குழிகள் வெட்டப்பட்டு அடக்கம் செய்யும் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

சிரியாவின் ஜன்டைரிஸ் நகரில் வசிக்கும் 60 வயது முதியவர் அலி பத்தல் என்பவர் தெரிவிக்கையில்,

"எனது குடும்பத்தினர் இந்த இடிந்த கட்டடத்துக்கு கீழேயுள்ளனர். அவர்களை மீட்க யாரும் இல்லை. அவர்களின் குரல்களை என்னால் கேட்க முடிகிறது. அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள். ஆனால், அவர்களை மீட்க யாரும் இல்லை" எனத் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் சிரியாவில் சரிந்த கட்டடங்களுக்கு இடையே ஒரு குடும்பமே மீட்கப்பட்ட சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பாதுகாப்புப் படையினரால் அந்தக் குடும்பத்தினர் மீட்கப்படும்போது சுற்றியிருந்த மக்கள் ஆரவாரக் குரல் எழுப்பி வரவேற்கும் காட்சிகள் இணையத்தில் வைரலாகியுள்ளன.

# உலக வரைபடத்திலிருந்து 10 மீற்றர் நகர்ந்த துருக்கி




நிலநடுக்கம் காரணமாக மொத்தமாக துருக்கி நாடே 10 மீற்றர் நகர்ந்துள்ளதாக ஆராய்ச்சியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

துருக்கி நிலநடுக்கம் இந்த வருடத்தில் நடைபெற்ற மிகப்பெரிய பேரழிவாக பார்க்கப்படுகிறது. கடந்த 50 வருடங்களில் துருக்கி சந்தித்த மிக மோசமான நிலநடுக்கமாக, பேரழிவாக இந்தச் சம்பவம் பார்க்கப்படுகிறது. துருக்கி பொதுவாக அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படும் ஆக்டிவ் நிலநடுக்க பகுதியாகும்.

துருக்கி நிலநடுக்கம் காரணமாக கிட்டத்தட்ட 100 கி.மீ. தூரத்திற்கு போல்ட் லைன் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதாவது 100 கிலோமீற்றர் தூரத்திற்கு தரையில் அடுக்குகள் இரண்டாக பிளந்து நகர்ந்துள்ளன. 100 கி.மீ. தூரத்திற்கு நில அடுக்குகள் பிரிந்து பிளவுபட்டிருக்கின்றன. அந்தளவிற்கு மோசமான நிலநடுக்கம் அங்கே ஏற்பட்டுள்ளது.

யூரேசிய தட்டு, ஆபிரிக்கா மற்றும் அரேபியா தட்டுகள் அனைத்தும் ஒரே இடத்தில் சந்திக்கும் பகுதியாக துருக்கி அனத்டோலியன் தட்டு அமைந்துள்ளது.

இந்த அனத்டோலியன் தட்டு என்பது யூரேசியா, ஆபிரிக்கா மற்றும் அரேபியா தட்டுகளுக்கு இடையே அமைந்துள்ளது. இதுதான் உலகின் மிகவும் ஆபத்தான புள்ளியாக அறியப்படுகிறது.

அதாவது, இதில் ஏதேனும் ஒரு தட்டு நகர்ந்தாலும் துருக்கியில் நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. தற்போது துருக்கியில் ஏற்பட்டிருக்கும் நிலநடுக்கம் அரேபியன் தட்டும் அனத்டோலியன் தட்டும் உரசியதால் ஏற்பட்டிருக்கிறது.

மேலும் 3 வகையான தட்டுகள் ஒரே இடத்திலுள்ளதால் அடிக்கடி நகர்வுகள் ஏற்பட்டு, துருக்கி அதிகமாக நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டு வருகிறது.

துருக்கி நிலநடுக்கத்தில் அரேபியன் மற்றும் அனத்டோலியன் தட்டுகள் நகர்ந்துள்ளன.

அத்தோடு ஒரு முறை தட்டு நகர்ந்தால் அதற்கு மேலேயிருக்கும் தட்டுகளும் நகரும் சூழ்நிலை ஏற்படும். இது கிட்டத்தட்ட சங்கிலி விளைவுபோல் சில நொடிகள் ஏற்படும். இதன்பின் இந்த நிலநடுக்கம் முடிந்தும் சிறியளவிலான நகர்வுகள் இருக்கும். இதை 'ஆட்டர் ஷொக்' என்றும் கூறுவர்.

### மோசமான பாதிப்பு

பொதுவாக நிலநடுக்கத்தை விட அதன் பின்னர் ஏற்படும் நில அதிர்வுகளில்தான் (aftershocks) அதிக பாதிப்பு ஏற்படும். ஏனென்றால் முதல் நிலநடுக்கத்தில் தப்பிப் பிழைத்த பலவீனமான கட்டடங்களும் கூட இதில் தரைமட்டமாகிவிடும். துருக்கியில் முதலில் பதிவான நிலநடுக்கத்திற்குப் பின்னர், 4 ரிச்டருக்கும் அதிகமான 200இற்கும் மேற்பட்ட நில அதிர்வுகள் (aftershocks) பதிவுசெய்யப்பட்டுள்ளன. நேரம் செல்லச் செல்ல இந்த நிலநடுக்கத்திற்கு பிந்தைய நில அதிர்வுகளின் எண்ணிக்கையும் வலிமையும் தொடர்ந்து குறைந்தே வரும் என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

துருக்கி நிலநடுக்கத்தில் இப்படித்தான் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில்தான் நிலநடுக்கம் காரணமாக மொத்தமாக துருக்கி நாடே 10 மீற்றர் நகர்ந்துள்ளதாக ஆராய்ச்சியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இத்தாலி நிலநடுக்க ஆய்வாளர், புவியியல் வல்லுனர் கார்லோ டோஃலோனி வெளியிட்டுள்ள அறிக்கையில், துருக்கியின் நில அடுக்குகள் 10 மீற்றர் வரை நகர்ந்துள்ளன. சிரியா இதைவிட கொஞ்சம் குறைவாக நகர்ந்திருக்கலாம். ஆனால், இது முதல் கட்ட தகவல்களின் அடிப்படையில்தான் சொல்லப்படுகிறது. முழுமையான விவரங்கள் கிடைத்த பின் துருக்கி எவ்வளவு தூரம் நகர்ந்துள்ளது என்று சொல்ல முடியும் என்று கூறப்பட்டுள்ளது. மொத்தம் 190 கிலோமீற்றர் சுற்றளவு கொண்ட பகுதிகளில் நிலம் அப்படியே பெயர்ந்து வெடித்துள்ளது. இதனால் மொத்த துருக்கியும் பாதிக்கப்பட்டுள்ளது. இதில் வெளியே தெரிந்த நிலநடுக்கத்தை விட தெரியாத நிலநடுக்கங்கள் 5-6 சிறியளவில் இடையிடையே ஏற்பட்டுள்ளன. இதனால் துருக்கி தற்போது இருக்கும் இடத்திலிருந்து இலேசான தென் மேற்கு திசையில் நகர்ந்துள்ளது என்று அந்த ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார்.

# பாரிய அளவிலான நிலநடுக்கம் ஆப்கான் - பாக். இந்தியா வழியாக இந்தியப் பெருங்கடலில் முடிவடையும்

## துருக்கி நிலநடுக்கம் குறித்து கணித்த ஆராய்ச்சியாளர் எச்சரிக்கை




துருக்கி மற்றும் சிரியாவில் ஏற்பட்டுள்ள நிலநடுக்கம் குறித்து 3 நாட்களுக்கு முன்பே கணித்து எச்சரித்த நெதர்லாந்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர், தற்போது "இந்தியாவிலும் இதேபோன்ற சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது" என அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார்.

நெதர்லாந்தைச் சேர்ந்த புவியியல் ஆராய்ச்சியாளரான ஃப்ரான்க் ஹூகெர்பீட்ஸ் (frank hoogerbeets) கடந்த பெப்ரவரி 3ஆம் திகதியே துருக்கி உள்ளிட்ட பகுதிகளில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்படும் என துல்லியமாக கணித்துள்ளார் . SSGEOS என்ற புவியியல் ஆய்வு நிறுவனத்தில் ஆராய்ச்சியாளராகவுள்ள இவர், ட்விட்டரில் வெளியிட்ட பதிவு சமூக வலைத்தளங்களில் தற்போது அதிகம் பகிரப்பட்டு வருகிறது.

அதில், "மத்திய - தெற்கு துருக்கி, ஜோர்டான், சிரியா, லெபனான் பகுதிகளில் 7.5 என்ற ரிச்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகும்" என்று பதிவிட்டிருந்தார். ஆனால், அதை அப்போது பலர் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. இந்நிலையில், நேற்றுமுன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டவுடன் ட்விட்டரில் மீண்டும் ஃப்ரான்க் பதிவிட்டிருக்கிறார்.

"மத்திய துருக்கியில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக என் மனம் இருக்கிறது. 115 மற்றும் 526ஆவது ஆண்டுகளைபோல் இப்பகுதியில் இதுபோன்ற நிலநடுக்கம் ஏற்படும் என்று நான் ஏற்கனவே சொன்னேன்" என்று பதிவிட்டிருந்தார். இதனையடுத்து பிரான்க் அடுத்தடுத்து புவியியல் சூழல் குறித்து வெளியிடும் கருத்துகள் உற்று நோக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், தற்போது அவர் தெரிவித்திருக்கும் தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அதில், "ஒரு பாரிய அளவிலான நிலநடுக்கம், ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டு பாகிஸ்தான் மற்றும் இந்தியா வழியாக வந்து இந்தியப் பெருங்கடலில் முடிவடையும்" என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், எப்போது ஏற்படும் என்று அவர் குறிப்பிடவில்லை.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7